



ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
5, வேங்கடேச அக்ரகாரம், மயிலாப்பூர், மதராஸ்.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 5

| மாலை 6 | Dec. 1941, விஷு ௵ மார்கழி ௴ | முத்து 6 |
|---|---|---|


# பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| யார் கை மேல்? | ... ... ரஸிகன் | 273 |
| சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார் | ... வே. ரா. சுந்தரராமன், எம். ஏ. | 283 |
| விஞ்ஞானமும் கற்பனைத்திறனும் | ... டி. பி. நவநீதகிருஷ்ணன், எம். ஏ. | 290 |
| அப்பர் சுவாமிகள் | ... வே. நாராயணன், எம். ஏ., எம். எல். | 296 |
| தமிழில் வெளிவந்துள்ள "பௌதிக நூல்" | ... ஹரிஹர இராமசந்திரன், பி. எஸ். ஸி. ... (ஆனர்ஸ்) | 302 |
| பசு வளர்த்தல் | ... சௌதரி முக்தர் ஸிங்க் | 304 |
| போகிற போக்கில் | ... ... மணி | 306 |
| விலையென்னும் விஷப் பூச்சி | ... கா. சி. வேங்கடரமணி | 308 |
| ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம் | ... கா. சி. வேங்கடரமணி | 309 |
| யார் உத்தமன் | ... என். சுப்பிரமணியம், பி. ஏ., எல். டி. | 310 |
| தயாளனின் தந்திரம் | ... ... சிவன் | 311 |
| கோலமும் அன்பும் | ... ... போன் | 313 |
| உதிர்ந்த மணிகள் | ... ... | 314 |



"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

இணையற்றது !

சகாயமான விலை!!

# "விக்டோரி ஆர்டு"

## ரெகுலேடர்




புகழ்பெற்ற செத்தாமஸ் கடிகாரம் மாதிரி செய்யப்பட்டது. 8-நாளைக்கு ஒருமுறை சாவி. ஒரு மணி அரைமணி அடிக்கும். பித்தளை அல்லது குரோம் ஓரங்கள் உடையது. ரொம்பவும் பளபளப்பாயும் பார்வைக்கு அழகாயும் இருக்கும். ஒவ்வொரு வீட்டுக்கும் இன்றியமையாதது.

| | | |
|---|---|---|
| 8-இன்ச் டயல் | ரூ | 30 |
| 10 ,, ,, | ரூ | 35 |
| 12 ,, ,, | ரூ | 45 |

பாக்கிங் & தபால் சிலவு பிரத்தியேகம்.

**10 - வருஷம் உத்திரவாதம்**

# காதர் & யூசப் பிரதர்ஸ்,

ரெயில்வே & கவர்ன்மெண்ட் சப்ளையர்கள்,

58 - 59, (B) ராட்டன் பஜார், சென்னை.




## நல்ல காபியின்

மூன்று முக்கிய அம்சங்கள்.

வாசனையை போற்றுவோர் நர்ஸூஸ் காபியையே தேடுவார்கள். பீபரி முதலிய ரகங்கள், வேறெங்கும்விட குறைந்த விலையில்.

# நர்ஸூஸ் காபி

நர்ஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி,
சேலம்.

தென்னிந்தியாவெங்கும் பிராஞ்சுகள்.

எல்லோரும் போற்றும் வாசனை.

TM-N-6

ஒரு ஆயுள் பாலிஸியை
பெற்றுக் கொள்ளுங்கள்

# ரூபி ஜெனரல்
## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

பலமுள்ள கவசம் | பத்திரமான சேமிப்பு

## நாட்டில் முன்னேறிவரும்
## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

சென்னை ராஜதானியின் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இக்கம்பெனியின் லைப் டிபார்ட்மெண்டின் இன்ஸ்பெக்டராக இருப்பதற்கு செல்வாக்குள்ள கனவான்கள் மனுச் செய்துகொள்ளவும்.

தலைமை ஆபீஸ் :—கல்கத்தா.

சென்னை பிராஞ்சு :—**12, தம்புச் செட்டித் தெரு.**

தபால் பெட்டி : **195.** டெலிபோன் நெம்பர் : **3581.**

தந்தி விலாசம் : ரூபின்ஷ்யூர்.

V. சிவராமன்,
லைப் செக்ரடரி.

E. நடேசன்,
பிராஞ்சு மானேஜர்.

# யார் கை மேல்?

[ரஸிகன்]

பாஸ்கரையருக்கு வீட்டுக்குப் போக அவசரம். காலமே 5-மணிக்கு ஒரு டம்ளர் வெறுங் காப்பி சாப்பிட்டது. வயிற்றைப் பசி கிண்டுகிறது. மணியோ ஒன்பது ஆய்விட்டது. 'டாண்ணு பதினோராவது மணிக்கி' வரவில்லையென்றால் ஆபீஸில் அமர்க்களப் பட்டுப்போம். ஹெட்கிளார்க்கு சீறிச் சீறி விழுவான். இனி மைலாப்பூர்க் கோடி போய் முழுகிச் சோற்றைத் தின்றுவிட்டு என்ன ஓட்டமாய் ஓடி வந்தாலும் இந்த 'எழவு பஸ்' சேர்ந்துகொண்டால்தானே 'டயத்துக்கு'ப் போகலாம். அரைமணி யாயிற்று, அவரும் பஸ்ஸுக்குக் காத்திருக்கிறார். மைலாப்பூர் வண்டி அந்த வழியே வந்தது வள்ளிசாய் இரண்டு. அவைகளும் அங்கே-பீ. ஆர். அண்டு ஸன்ஸுக்கு எதிர்த்தாப்போல்—நிற்கவே யில்லை. நிற்காததோடு மட்டுமா, அங்கேவந்ததும் சற்று ஜாஸ்தி வேகத்தோடல்லவா ஓட்டுகிறான்கள்? "இருந்தாலும் வெகு குறும்புக்காரன்கள் இந்த பஸ் ட்ரைவர்கள்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டார். அடியோடு, "அவன்கள் என்ன பண்ணுவன், கூலிக்காரன்கள் தானே. கம்பெனிக்காரன்னா அந்நியாயம் பண்ணறான். அரைமணியாகிறது, பஸ்ஸிலே ஒரு ஸீட் ஆப்டாதில்லேன்னா இந்த எழவு பஸ் ஸர்விஸ் என்னதுக்கு? அவன்களைச் சொல்லறதிலே காரியமில்லே, மானாப்பலின்னா இப்படித்தான்," என்று மேலும் மேலும் கடுமையாய்ச் சீற்றம் கொண்டு, 'டிராமிலே போய்த்தான் தொலைவோமா?' என்றுகூட நினைத்தார். ஆனால் அதற்கு இன்னொரு 50, 100 தப்படி நடந்தாகவேணும். மேலும் டிராமில் போனால் லஸ்ஸில் இறங்கிச் சித்திரைக்குளமல்லவா போகவேணும்.? காலையிலிருந்து எவ்வளவு நடை நடந்தாய்விட்டது.

திருவல்லிக்கேணியில் முன்பின் கேள்விப்படாத ஏதோ ஒரு முடுக்கிலே, நாலுகுடியோடு ஐந்தாவதாய் இருக்கிற மனுஷனைத் தேடிக் கண்டு பிடிக்கிறதென்றால் சாதாரண காரியமா? சுமார் இரண்டு மூன்று மைல் நடந்து, முப்பது வீடு ஏறி, ஐம்பது பேரை விசாரித்து—சென்னைப் பட்டணத்தில் வழிப்போக்கன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுவது அனாகரிகமென்ற கொள்கை, தலைமுறை தத்துவமாய் வழங்கிவருகிறது—கடைசியில் நாராசச் சந்துபோன்ற ஒரு சாக்கடை வழியும் சிமெண்டு போட்ட நடைவழியே சென்று இரண்டு பக்கமும் வீடுகளின் ஓட்டுவாரிகள் மேலே கவிழ, பட்டப் பகலிலேயே இருளடைந்திருக்கும் அதில் தட்டுத் தடுமாறி மெதுவாய் வெளிப்பட்டு, ஒரு வேப்ப மாமும் தலை குறுகிய இரண்டு தென்னை மரங்களும் நிற்கும் ஓர் சிறிய திறப்பு வெளிக்கு நாலு பக்கமும் உள்ள சின்னச் சின்ன வீடுகளில் ஒன்றில் குமரகோவில் வெங்கிடுசாமி அய்யரை 'உன் பாடு என்பாடு' என்று கண்டு பிடித்தார். அப்பொழுது அவர் கௌபீனத்தைக் கட்டிக்கொண்டு 'வாசற்படிக் கடுத்தாப்போலுள்ள நடையில் எண்ணை தேய்த்துக்கொண்டிருந்தார். "நல்ல சகுனமாயிருக்கு!" என்று தனக்குள் வெறுத்துக்கொண்டு, பாஸ்கரையர் "வெங்கடுஸாமிய்யர்வாள்-?" என்றார்.

"ஆமாம், நான்தான், தாங்களாரு?"

"மேலப்பள்ளம் எனக்கு, தங்கள் மருமான் ஜாதக விஷயமாய் வந்தேன்."

"அப்படியா? மேலப்பள்ளத்திலேயேயிருக்கேளா?"

"இல்லே, இந்த வூர்லேதான் இருக்கேன், டிட்மஸ் ப்ரதர்ஸில் வேலை."

"ஓகோ? திண்ணைலே ஒக்காருங்கோ—எட்டி, மங்களம், உள்ளேருக்கிற நாற்காலியைக் கொணந்து போடு" என்று உபசரித்துவிட்டு, உள் பக்கத்திற்கு மறைவாய்க் கட்டப்பட்டிருந்த கசம்பிடித்த சாக்குப் படுதாவைத் தள்ளிக்கொண்டு

உள்ளே ஸ்நானத்திற்குச் சென்றார். அவர் சிறு பெண், மூன்று நல்ல கால்களும் ஒரு கால் சற்று வாதம் கண்டதுமான ஒரு நாற்காலியைக் கொண்டுவந்து மேடும் பள்ளமுமா யிருக்கும் விராண்டாவில் போட்டாள். அதில் வெகு தந்திரமாய் பாலென்ஸ் பண்ணிக்கொண்டு உட்கார்ந்திருக்கவேண்டிய முடையில் பாஸ்கரையருக்குப் பொழுது போனதுகூடத் தெரியவில்லை.

வெங்கிடுஸாமி அய்யர் ஸ்நானம் முடித்து வேஷ்டியைக் கட்டிக்கொண்டு வந்தார். இருப்பது ஒரே நாற்காலியானபடியால் அவரைக் கண்டதும் பாஸ்கரையர் எழுந்துவிட்டார். வெங்கிடுஸாமி அய்யரும் மரியாதைக்கு, “நீங்க ஒக்காருங்கோன்னா, வேறே நாற்காலி கொண்டாரச் சொல்றேன்” என்று சொன்னாரே யொழிய நாற்காலியைக் காணோம். இருவரும் நின்றபடியே பேசினார்கள் அரை மணி ஸாவகாசம்—வெங்கிடுஸாமி அய்யர் காப்பி சாப்பிடவேணு மென்று உபசாரம் வேறு பண்ணினார். “இல்லை, ஆபீஸுக்குப் போகணும், நாழியாச்சு”, என்று பாஸ்கரையர் தட்டிக் கழிக்க, “இன்னிக்கென்ன ஞாயித்துக் கிழமேலே ஆபீஸ்?” என்று கேள்வி பிறந்தது. “என்ன பண்ணறது, பேய்க்கு வாக்கப்பட்டா புளிய மரத்திலே ஏறித்தானே ஆகணும். வருஷ ஆஹைறு, கணக்கு முடிக்கணும்கிறான். ‘அதமம் ஸேவகா வ்ருத்தி’, அதிலும் ப்ரைவேட் ஸர்விஸ்” என்று அவர் பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, வெங்கிடுஸாமி அய்யர் பெண், சந்தனமும் கண்ணாடியும் ஒரு டம்ளரில் ஜலமும் கொண்டு வந்து வைத்தாள். அவர் ‘அர்த்த சந்திரன்’ கருக்காய்ப் போடுவதைக் கண்ட பாஸ்கரையருக்கு “இவர்கள் வடதேசம் போலிருக்கே” என்று தோன்ற, கொஞ்சம் உத்தண்டமாகவே, “நாங்க சோள தேசம்தான்” என்றார்.

வெங்கிடுஸாமி அய்யர் அவ்வித வேற்றுமைகளைப் பாராட்டாதவர்போல, “அதெல்லாம் இந்தக் காலத்திலே யார் பாக்கறான்னா?” என்று சொன்னாலும், அப்புறம் பேச்சு ஒரு தினுஸாகத்தானிருந்தது. “பையன் தகப்பனாருக்கு எழுதிச் சொல்லறேன்” என்று மழுப்பலாய்ச் செய்தி சொல்லிவிட்டார். “இல்லை” என்பது அதற்கர்த்தம் என்று பாஸ்கரையருக்கு வெகு காலத்து அனுபோகத்தால் நன்றாய்த் தெரியும். போகாததற்கு, பெண் ஜாதகத்தை வாங்கிக்கொண்டு பிள்ளை ஜாதகம் கொடுப்பதற்காகத் தன் பெண்ணை டயரியை எடுத்துவரச் சொல்லியிருந்தவர், திடீரென்று பாஸ்கரையர் அவசரத்தை யுணர்ந்தவர்போல, “அப்பொ, ஒங்களுக்கு நாழியாகறாப்பிலேருக்கே. அந்த ஜாதகம் எங்கெ வெச்சிருக்கேனோ, தேடிப் பாத்தாகணும்-எதுக்கு, நீங்கள்தான் பையன் ஜாதகம் கிடைச்சுது, பாத்துட்டேன்னேளே. ஆகையாலே இப்பொ ஜாதகம் இன்னொரு காப்பி பண்ணிண்டு மெனக்கெடுவானேன். இதெல்லாம் அனுவசியமான பார்மாலிடிதானே” என்று ஜாடையாய்ச் சொன்னார். அதன் நோக்கத்தைத் தெரிந்துகொண்டு, பாஸ்கரையரும் “அது ஸரிதான். அப்பொ நான் வரட்டுமா? சீக்கிரம் எழுதித் தகவல் வரவழிச்சாத் தேவல்லே” என்று உபசாரத்துக்குச் சொல்லிவிட்டு, “இன்னொரு நாள் வேஸ்டு” என்று தனக்குள்ளே முணுமுணுத்துக்கொண்டு அவரிடம் விடைபெற்று, டிராம், பஸ் ஒன்றும் தோதில்லாத அந்த முக்கிட்டிலிருந்து நேரமவுண்ட்ரோடுக்கு நடையைக் கட்டினார். “இந்த பஸ் இருக்கா வயத்தெரிச்சலைப் பாத்தாப் பேசாமே ஆத்துக்கே நடந்து போயிருக்கலாம் போலிருக்கே” என்று அடிக்கடி சொல்லிக்கொண்டாரேயொழிய, மேற்கண்டபடி பத்துத் தப்படி நடந்து டிராமுக்குக்கூடப் போகவேண்டிய ஊக்கமும் தீர்மானமும் இல்லாமல் தன் தலைவிதியை நொந்துகொண்டு நின்றார்.

நல்ல வேளையாய் ஒரு பஸ் அங்கே வந்து நின்றது. உடனே அவருடன் காத்திருந்த பத்துப்பேரும் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து வண்டியிலுள்ளவர்கள் கீழே யிறங்க முடியாமல் வழியை அடைத்துக்கொண்டு ஒருவர்மேல் ஒருவர் விழுந்து காலும் கையும் நெசுக்குண்டார்களே

யொழியக் கடைசியில் காலியானது ஒரு இடம். பாஸ்கரையருக்கிருந்த ஆத்திரத்தில் இந்தக் குஸ்தியைக் கண்டு ஸகஜமாய்ப் பயந்து எட்ட விலகும் அவரும் இடித்துப் புகுந்துகொண்டு ஏதோ அதிர்ஷ்ட வசத்தால் காலியான இடத்தைப் பொத்திக்கொண்டார். வண்டி நகர்ந்தது. தனக்குப் பக்கத்திலிருந்தவரை நிதானமாகக் கவனித்தார். அவர் தன் இடத்தையடைத்துக் கொண்டிருந்தது மன்னியில் அடுத்த இடத்திலும் பாதிக்குமேல் சுவாதீனப் படுத்திக்கொண் டிருந்தபடியால் பாஸ்கரைய்யர் கங்கில் தொத்திக்கொள்ள வேண்டியிருந்தது. வண்டி திரும்பும்போதெல்லாம் எதிரேயுள்ள தட்டின் சாய்மானத்தின்மேலுள்ள பிடியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டபடியால் கீழே விழாமல் தப்பினார். கண்டக்டர் ஒரு நிமிஷத்திற்கு நாலுதரம் குறுக்கும் நெடுக்குமாய்ப் போகவேண்டியிருந்தபடியால், "உள்ளே நகந்து ஒக்காருங்க ஸார், வழியே மறச்சிண்டிருக்கீங்களே!" என்று அதட்டினான். பாஸ்கரையர் நயமாய் இரண்டு மூன்று தரம், "ஸார், கொஞ்சம் நகருங்கோ," என்று சொன்னது பக்கத்திலிருந்த அந்த மனுஷனுக்குக் காதில் படவில்லைபோலிருந்தது. இதைப் பார்த்துக் கொஞ்சம் உரக்க இன்னொரு தரம் நகரும்படி வேண்டவே, அவர் பாஸ்கரையரை ஏற இறங்க ஒரு பார்வை பார்த்துவிட்டு, தன் பிருஷ்டத்தை ஒரு அங்குலம் தூக்கி ஒரு நூல் அப்புறம் நகர்த்தி மறுபடி அமர்ந்து வெளியே ஸாவகாசமாய்ப் பராக்குப் பார்க்க ஆரம்பித்துவிட்டார். பாஸ்கரையருக்கு அதனால் ஒரு சௌகரியமும் காணவில்லை. அவர்மேல் சற்று உராய்ந்தால் அவராக நகரமாட்டாரா என்று எண்ணிக் கொஞ்சம் நெருக்கினார். அந்தப் பேர்வழி போட்டிருந்த நூல் கிளம்பின அல்பாக்கா கோட்டின் கீழ்ப் பையில் ஏதோ கல்லுப்போலக் கெட்டியான ஒரு ஸாமான் பாஸ்கரையர் விளாப்புறத்தில் தாக்க அவர் மறுபடி அப்புறம் நகரவேண்டியதாயிற்று. அவர் பொறுமைக்குமொரு எல்லையிருந்தபடியால், "என்ன, ஸார், பாக்கெட்டிலே? என்று சற்று வேகத்தோடு கேட்க, வாயைத் திறவாமலிருந்த அந்த மனுஷன், "என்னவாயிருந்தா ஒமக்கு என்னய்யா?" என்று வெகு அலக்ஷியமாய் பதில் சொல்லுவதைக் கேட்டு பாஸ்கரையருக்குக் கோபமும் எரிச்சலும் பொங்கிற்று. அவரும் துடுக்காய்ப் பதில்சொல்ல வாயெடுத்தார். ஆனால் சுபாவமாய் இவ்விதம் வண்டிக் காடிகளில் கூத்துக் கட்டியடிப்பதையே ஒரு லக்ஷியமாய்க்கொண்ட பெரிய மனுஷர்களைக் கண்டாலே வெறுக்கும் தன்மையுள்ள அவருக்குத்தானப்படிச் செய்வதென்றால் வெட்கம் தானே. இவ்விதத் தகராறுகளில் அவர் தலையிட்டுக்கொள்ள இஷ்டப்படுவதில்லை. மேலும், இந்த மனுஷன் நேரப் பார்த்துப் பேசினாலல்லவா? அவரும் ஒரு அசாமி, தன்னைப்போல் காசு கொடுத்து டிக்கெட்டு வாங்கினவர், என்றதாகவே அவனுக்குப் படவில்லை போலிருந்தது அவன் ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டு பேசினதைப் பார்த்தால்.

இந்த மனுஷனைப் பார்க்கப் பார்க்க பாஸ்கரையருக்கு வெறுப்பு ஒருபுறம் அதிகரித்தாலும் ஒருபுறம் வினோதமும் வியப்பும் விருத்தியாயின. முதலில் இன்னொரு இடம் அகப்பட்டால், வெயிலாயிருந்தாலும் பாதகமில்லை, அங்கே போய் விடலாமென்று எண்ணினது வாஸ்தவம்தான். ஏனெனில், அவன் இடத்தையடைத்துக்கொண்டது மன்னியில் சட்டைப் பையிலிருந்த வெற்றிலைப் பெட்டியை—அது தான் பாஸ்கரையரை விலாப்புறத்தில் நிமிண்டிய வஸ்து-எடுத்து ஸாவதானமாக வெற்றிலை போட்டுக்கொள்ளும் சடங்கை நிறைவேற்றும் ஒழுங்கில் வெற்றிலையை உதரும்போது அதிலுள்ள நீர்த்துளிகள் பாஸ்கரையர்மேல் விழுவதும், வெற்றிலை நுனியையும் காம்பையும் கிள்ளி நுனி விரலால் லாகவமாய் அவன் சுண்ட பாஸ்கரையர் மார்பும் மடியும் அர்ச்சனை பண்ணப் பெறுவதும், அதிகப்படிச் சுண்ணாம்பை பாஸ்கரையர் கையால் பிடித்துக்கொண்டிருக்கும் பிடியில் வெள்ளையடிப்பதுபோல் அவன் தீற்றுவதும், இவையெல்லாம் சேர்ந்து அவருக்

குத் தன்னை இவ்விதமாகவே வேணுமென்று அவன் உபத்திரவிப்பதாக நிச்சயமாய்ப் பட்டது. முகக் குறியால் அவனைப் பொசுக்கும் சக்தி யவருக் கிருந்திருக்கும் பக்ஷத்தில் அவன் அந்த நிமிஷமே சாம்பலாயிருப்பான். அவன் அவரைத் திரும்பிப் பார்க்கவேயில்லை. நடைக்கடுத்த பக்கத்தில் இரண்டுதட்டு முன்னே உட்கார்ந்திருந்த ஒருவர் கையில் பேப்பர் இருக்கக்கண்டு பொலிகாளை மொக்காரம் போடும் தினுசில், "ஸார், அந்தப் பேப்பரை இப்படிக் குடுங்கோ, பார்ப்போம்," என்று கேட்ட அதிகாரத்தில் அந்த அசாமி மயங்கிப் போனவர்போல் பேப்பரை பவ்யமாய் நீட்ட, அதைப் பிரித்து ஒவ்வொரு கடுதாசாய் எடுத்து விஸ்தாரமாய் பாஸ்கரையர் கண்ணும் மூஞ்சியும் மூடும்படி பரப்பிக்கொண்டு, 'கனம்' 'ஜடை' சொல்லும் குரலில் உதாத்த அனுதாத்தங்களோடு வாசிக்கத் தலைப்பட்டு, அந்த உற்சாகத்திலோ வெற்றிலைச் சார் விருவிருப்பாய் உள்ளே யிறங்கின வேகத்திலோ மணிக்கு 50-மைல் போகும் ரயில்வண்டி பாயிண்டுகளில் திரும்பும்போது என்ன ஆட்டமாடி உள்ளிருப்பவருக் கதிர்ச்சியை யுண்டாக்குமோ அவ்விதம் துடையை ஆட்ட ஆரம்பித்த வேகத்தில், பாஸ்கரையர் கைப்பிடியை இன்னும் அதிக வலுவாகப் பிடித்துக் கொள்ளவேண்டிய தாயிற்று. இல்லையேல் கண்டிப்பாய்க் கீழே விழுந்திருப்பார்.

இதற்குள் வண்டி ஸ்மித் கார்னர் வந்து சேர்ந்தது. அரைக்கணம் "இந்த பாழி எறங்கித் தொலையமாட்டானா?" என்று பாஸ்கரையர் ஆவல் பட்டார். அவன் நங்கூரம் பாய்ச்சினதுபோலிருந்தான். வேறு இடம் காலியானால் போகலாமென்று எண்ணினார். ஒருவரும் இறங்குவதாயில்லை. தன்னொருவனைத் தவிர பாக்கி அத்தனை பேரும் 'பேடா' போகிறவர்களாய் அவருக்குப் பட்டது. "இந்த எழவெடுத்த ஹாலிடே டிக்கட் வந்தாலும் வந்தது, சோம்பேரிகளுக்கு ஞாயித்திக் கெழமேலே பஸ்ஸிலேயே குடியிருப்பாப் போச்சு" என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டு, "ஏன். அப்பா, ஒத்திருக்தான் இறங்கல்லியே, எதுக்காக மெனக்கிடுறே" என்று நயமாய்க் கேட்பவர் போல் தனக்குள் பொங்கியெழும் ஆத்திரத்தை யடக்கிக்கொண்டு கண்டக்டரைக் கேட்டார். இந்த வார்த்தைகள் அவன் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. அவன் ஒரு சிறு பெண் இரண்டு குழந்தைகளுடன் வண்டி யேறுவதற்கு அங்கே வந்து நின்றதைக்கண்டு, அவர்களுக் கிடம் பண்ணிக்கொடுக்கும் அக்கரையில் முழு மனத்தைச் செலுத்தினவன்போல் அவர்களையே பார்த்துத் தியானத்தில் அழுந்தியிருந்து, திடீரென்று விழித்துக்கொண்டு, "எடம் இல்லே அம்மா" என்று அனுவசியமாய்ச் சொல்லி, "ரைட், ரைட், போ, எடமில்லை" என்று ட்ரைவரை எச்சரிக்கை பண்ணி, தன் இடத்தில் அமர்ந்து, பாஸ்கரைய்யரைப் பார்த்து, "ஏன், ஐயா, நீங்க எவ்வளவு அவுசரப்பட்டு ஏறிநீங்க, பாக்கிப்பேரைப் புடிச்சுத் தள்ளிக்கிட்டு, அப்படி பொம்புள்ளைங்க ஏற ஆகுமா? நாம்தானே பாத்து முடிஞ்சா எடம் பண்ணிக் குடுக்கணும், பாவம், எத்தனை நாழியா நிக்கராங்களோ!" என்று மேற்கரித்துப் பேசத் தலைப்பட்டான். வண்டியிலிருந்த பாக்கிப்பேரும், அடித்துப் பேசுபவன் கக்ஷியே பேச வேண்டியது என்ற புராதன நியாயத்தை யனுசரித்து, "ஆமாம், பொரத்தயார் கஷ்டம் ரொம்பப் பேருக்குத் தெரியரதே யில்லே" என்றும், "அப்படி அவசரமாயிருந்தா அய்யரு தனி வண்டீல்லே வெச்சுட்டுப் போகணும்" என்றும், "என்ன, இன்னிக்கி ஞாயித்திக் கெழமைதானே" என்றும் அவனவனுக்குத் தோன்றினதைச் சொல்ல ஆரம்பித்தார்கள். "மடையன்கள்!" என்று அவர்கள் அனைவரையும் சேர்த்து ஒரே வார்த்தையில் (தன் மனதுக்குள்) நிராகரித்துவிட்டு, மெட்ராஸ் கிளப் நெருங்கும் சமயமாதலால் "இங்கேயாவது இந்த ஆள் எறங்கமாட்டானா!" என்று பாஸ்கரையர் ஏங்கினார். 'ஸாகர் ஸாகர்' என்று கண்டக்டர் கத்தினானேயொழிய அவன் அசையவில்லை. பேப்பரில் முழு மனத்தையும் செலுத்தியிருந்தும் இரண்டு நிமிஷத்திற்கொருதரம்

பையில் கையைவிட்டு (முழங்கை முண்டு பாஸ்கரையரைக் குடைய) வெற்றிலைப் பெட்டியை எடுப்பதும், எக்கில் சொருகி யிருக்கும் பொடி டப்பியை (அதுவும் பாஸ்கரையர் உட்கார்ந்திருந்த பக்கம்தான் இருந்தது) எடுத்து ஒரு சிட்டிகை பொடியைச் சூர்வாணம் போன்ற சத்தத் தோடு உள்ளே செலுத்திக் கையை உதரி பாஸ்கரையர் கண்களைப் பொடித் தூளால் நிரப்புவதும், சிற்றைக் கொருதரம் அரைப்படி எச்சிலைப் பீச்சாங்குழாய் பீச்சுவதுபோல் வெளியே துப்புவதற்கு முழு உடம்பையும் திருப்பும் வேகத்தில் புயலில் பேரலை தாக்கச் சிறு படகுகள் த்தளிப்பதுபோல் பாஸ்கரையரைத் தடு மாறச் செய்வதுமான லீலைகளைச் செய்து வந்தான்.

இவ்வளவையும் பொறுத்து வந்ததின் பயனாகவோ என்னவோ, ராயப்பேட்டை யில் இரண்டொரு இடம் காலியாகியும் பாஸ்கரையர் தப்பித்தோடாமல் இருந்த விடத்திலேயே யிருந்து இந்த அதிசயப் பிராணியைக் கண் கொட்டாமல் பார்த்து வந்தார். பருத்த சரீரம், உப்பின கன் னங்கள், உலகத்தையே அலக்ஷியமாய் எண்ணினவை போன்று எப்பொழுதும் மேல் பார்வை பார்க்கும் கண்கள், முக க்ஷவரம், ஆனால் மூன்றுநாள் தாடி வளர்ந் திருந்தது. தலையில் 'பி. எல்.' குடுமி, அதைச் சுற்றிக் கிணற்றுக்குத் தலை வேடு கட்டினாற்போல் அரை அங்குல நீளம் வளர்ந் தடர்ந்திருந்த ஜில்பா, மேட்டு நெற்றியில் சாந்துப்பொட்டு முதல்நாள் இட்டு வியர்வையில் பாதி யழிந்து பாக்கி நீற்றியிருந்ததிலிருந்து காலையில் முகங் கூடக் கழுவவில்லையென்று தோற்றிற்று. இருந்தாலும் வாயில் வெற்றிலை வழிவதை யும், எவ்விதமாய்ப் பார்த்தாலும் தெம்பு ததும்பி நிற்பதையும் கவனிக்கும்போது காலை ஆகாரம் பூரணமாய் உள்ளேயிறங்கி யிருக்கவேண்டுமென்றே நிச்சயித்தார் பாஸ்கரையர். அதற்குள் வண்டி ஆள் வார்ப் பேட்டை வந்துவிட்டது. அவன் தான் உட்கார்ந்திருந்த தட்டின் கீழிருந்து ஒரு ஸூட்கேஸ், ஒரு தலை யணி, ஒரு வெள்ளிக் கூஜா இவைகளை முன்னாலே இழுத்து வைத்ததைக் கண்ட தும், "ஓகோ, வெளியூர் அசாமி, ரயில் லேருந்து வராப்பிலேருக்கு" என்று ஊகித்து, "பல்லுக்கூடத் தேய்ச்சானோ தேய்க்கல்லியோ!" என்று வெகு அருசி யோடு தனக்குள்ளே சொல்லிக்கொண் டார். வண்டி மைலாப்பூர் குளக்கரை வரும் தருணம். அப்பொழுதுதான் முதல் முதல் அவர் ஒரு பிராணி தன் பக்கத்தில் இருப்பதைக் கண்டவன்போல், "ஏன், ஸார், தெங்கூர் செல்வ விநாயகர் கோவி லாமே, அது எங்கே யிருக்கு தெரியுமா?" என்று வினவினான். ஆனால் அந்த வார்த்தை காதில் படாமல் கேள்வி கேட்கும் தோர ணையையும் கம்பீரமான அதட்டலையும் மட்டும் யாராவது கவனித்திருந்தால் நிச் சயமாய் பாஸ்கரையரை ஏதோ பெருத்த அபசாரத்திற்காக அவன் கண்டித்துக் காகிதாப் பண்ணுவதுபோலவே அவர் களுக்குத் தோன்றியிருக்கும். இதனால் எரிச்சல் அதிகமாக, வண்டி ஸ்டாண்டில் வந்து நின்றதைக்கண்டு அவசரமாய்ப் பதில் சொல்லாமலே கீழே யிறங்கி அவர் தன் வீட்டை நோக்கி நடந்தார். அவன் அவர் முதுகைப் பார்த்து, "அட, எழவே, காது கேக்கல்லியா!" என்று ஏளனமாய்ச் சொல்லிச் சிரித்துவிட்டு, 'நான், நான்' என்று கூட்டம்போட்டுக் கூக்குரலிடும் ரிக்ஷாக்காரன்களில் ஒருவனைச் சாமான் களை எடுத்து வைக்கும்படி யதிகாரம் பண்ணி, வண்டியில் ஏறிக்கொண்டு, 'சால் திரி ஹோட்டல்' என்று சொன்னது அவர் காதில் விழுந்தது. "இப்பேர்ப்பட்ட ஜந்துக்களையும் பகவான் சிருஷ்டிக்கி றானே" என்று ஈசுவரன் திருவுள்ளத்தை நினைத்து வியந்துகொண்டு தெங்கூர் செல்வ விநாயகர் தெருவிலுள்ள தன் வீட்டை யடைந்தார்.

மணி பத்தாய்விட்டது. அவசர அவ சரமாய் இரண்டு சொம்பு தண்ணீரைத் தலையில் கொட்டிக்கொண்டு ஸ்நானத்தை முடித்து ஜபதபங்களை 'ஆச்சு, ஆச்சு' என்று செய்து போஜனத்திற்கு உட்கா ரும் சமயம் திடீரென்று யாரோ வாசற் கதவைப் பலமாய்த் தட்டும் சத்தம் கேட் டது. வேறொருவரும் போய்த் திறக்கத்

தோது இல்லாததால், "சோத்து வேளைக்கி யார் வந்து தொலைராளோ தெரியல்லியே, எற்கனவே நாழியாயிட்டுது!" என்று முணு முணுத்துக்கொண்டு பாஸ்கரையரே போய்க் கதவைத் திறந்தார். அங்கே பஸ்ஸில் தன் பக்கத்தில் உட்கார்ந்து பலவிதமான உபத்திரவத்தைப் பண்ணின ஆசாமி கூர்ச்சம்போல் நிற்கக் கண்டு, ஒரு பக்கம் ஆச்சரியமும் ஒரு பக்கம் ஆத்திரமுமாய் இன்னது சொல்வதென்று தெரியாமல் "யார்" என்றார். வந்த பேர்வழி இவரைக்கண்டு திடுக்கிட்டதாகவாவது வெட்கப்பட்டதாகவாவது தெரியவில்லை. அரை குறையாய்த் திறந்திருந்த கதவைத் தாராளமாய்த் திறக்கும்படி தன்கையால் தள்ளிக்கொண்டு அவன் சுவாதீனமாய் உள்ளே வந்த லாகவத்தில் பாஸ்கரையர் பின் வாங்கவேண்டியதாயிற்று. அப்படி வரும்போதே உச்சஸ்தாயியில் "என்ன, ஸார், என்னைத் தெரியல்லே! இப்போதானே பத்து நிமிஷத்துக்கு மின்னாலே பஸ்ஸிலே சந்திச்சோம்" என்று ஞாபகப்படுத்தி, அவர் தலையை அசக்குவதே தெரியாமல் அசக்குவதையும் லக்ஷியம் பண்ணாமல், "அப்பவே, ஒரு சந்தேகப்பட்டுத்தான் ஒங்களைக் கேட்டேன். நீங்க பதிலே சொல்லாமெப் பூட்டீளே! தெரிஞ்சிருந்தா இத்தனை நாழி மெனக்கட்டிருக்கவேண்டியில்லியே!" என்று அவர்பேரில் குற்றம் வேறு சுமத்த ஆரம்பித்தான். அவருக்கிருந்த அவசரத்தில் இவனிடம் வம்புக்கு வாய் கொடுக்கப்படாதென்று, "நீங்க சொல்றது ஒண்ணும் புரியல்லே எனக்கு— விஷயத்தைச் சொல்லுங்கோ, நாழியாகறது" என்றார்.

"சரியாப்போச்சு! விஷயம் சொல்றத்துக்குத்தானே வந்திருக்கேன். எனக்குத் தாமரைத் தோப்பு—அந்த ஊர்லே வக்கீல் ராம சேஷையர்னு இருந்தார் கேள்விப்பட்டிருக்கலாமே?" என்று நிதானமாய்ப் பூர்வோத்தரம் சொல்ல ஆரம்பித்தான். அவர் வாய் திறவாமலிருந்தால்தான் சீக்கிரம் தப்பலாமென்று முடிவுசெய்து சும்மாவிருந்தார். அவன் அதற்காக யோசிக்கவில்லை. கூடத்திலிருந்த நாற்காலியொன்றில் அமர்ந்து, "சித்தே ஒக்காருங்கோ|" என்று உபசாரம்பண்ணி, "கலியாணக் காரியமா வந்திருக்கேன்" என்று முத்தாய்ப்புவைத்தான். பாஸ்கரையர் திடுக்கிட்டார். ராப்பகலாய்த் தன் பெண் கலியாணத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபடியால், எதிர் பாராமல் தானாய் ஒரு வரன்தான் கிடைத்து விட்டதோ என்றெண்ணி இரண்டு வினாடி ஸந்துஷ்டியடைந்தார். உடனே "இந்த வரட்டுத் தடியன் வரன்கொண்டுவந்தா அழகாத்தானிருக்கும்!" என்று எண்ணினபடியே இப்படி முட்டாள்தனமாய மனோராஜ்யம் பண்ணினதற்குத் தன்னைத்தானே ஏசிக் கொண்டார். அவன் சொல்லப் போவதை மட்டும் அவர் எதிர்பார்க்கவேயில்லை.

"ராமசேஷய்யர் பிள்ளை நான், கோபாலஸாமீன்னு பேரு. ஊரோடேதானிருக்கேன், சுக காலக்ஷேபம்" என்று சொல்லிஒரு அசட்டுச்சிரிப்புச்சிரித்துவிட்டுப் பின்னும், "அப்பா வேண்டிய ஐவேஜி வெச்சிருக்கார், பணம்னா தானே குட்டிப் போடறது! நம்மாத்திலேருந்தபடிப் பத்துப்பேரை அதிகாரம் பண்ணிக் காலக்ஷேபம் பண்ணறத்துக்கிருக்க, ஒரு பயகிட்டே கை கட்டிண்டிருக்கவாவதுன்னு, B. A. வரையிலே வாசிச்சுப்பிட்டு வேலைக்கிப் போகாமேயிருந்துட்டேன். வேணும்னா அப்பாவுக்கிருந்த செல்வாக்குக்குத் தாலூக்காவிலேபூந்திருக்கலாம், இத்தனை நாள் டிப்டிக்கலேக்டர்கூட ஆயிருக்கும் என்ன பிஸாத்து வேலை!" என்று தன் பிரதாபத்தைச் சொல்லி, "எனக்கொரு பொண்ணிருக்குக் கலியாணத்துக்கு எங்க பையன் ஜாதகம் வாங்கலாம்னு வந்தேன்" என்று கடைசியில் விஷயத்தைச் சொன்னான். பாஸ்கரையருக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் மூத்த பிள்ளைக்கு வயது 21, அந்த வருஷம் தான் ஹானர்ஸ் பரீக்ஷையில் முதலாமவனாய்த் தேறி, ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்தான். அவன் கலியாண விஷயத்தைப்பற்றி அவர் யோசிக்கவேயில்லை. முதல் காரணம் படிப்பு முடிந்து வேலையான பிறகுதான் அவன் கலியாணம் பண்ணிக் கொள்ளுவதாகப் பிடிவாதம் பிடித்ததால் அவரும்

அப்பேச்சை யெடுப்பதில்லை. இரண்டாவது, தன் பெண் கலியாணம் ஆகவேண்டியது முடை. ஆகையால் தாமரைத்தோப்புக் காட்டாள் மேற்கண்ட வார்த்தைகளைச் சொன்னதும் சொல்லாததுமாய், "பையனுக்கு இந்த வருஷம் கலியாணம் பண்ணுவதாய் உத்தேசமில்லை" யென்று சொல்லி அவன் மேலே மேலே பேசாமலிருக்கும் பொருட்டு, "எங்காத்துப் பொண்ணுக்குக்கலியாணத்துக்காக அலைஞ்சிண்டிருக்கேன்" என்று, ஆக்ஷேபிக்க முடியாத முகாந்தரத்தை யெடுத்துக் கூறி விட்டதாக வெண்ணிச் சொன்னார்.

அவனா இதற்கெல்லாம் மசிகிறவன்? "அடடா, இதென்ன பிரமாதக் காரியமா என்ன? நான் வேண்டியஜாதகம் தரேன் ஒங்களுக்கு. நாலுவருஷமா சுமார் ஐநூறு ஜாதகம்னுத் தேடி வெச்சிருக்கேன். எதையாவது ஒண்ணைப்பாத்து முடிச்சேளா, ரெண்டு கலியாணத்தையும் ஒரு பந்தல்லே வெச்சு நடத்திப் புட்டாப் போறது. ஒங்களுக்கொரு கவலை வாண்டாம். எல்லாம் நான் பாத்துக்கறேன். காக்கா கழுத்திலே கடுதாசி கட்டி யனுப்பிச்சா ஆயிரம் பேர் கை கட்டிக் காத்திண்டிருப்பன்" என்று உத்கோஷித்து விட்டு, "நீங்க என்ன தினுஸிலே பாக்கரேள்? ஏதோ பத்துமாகெலம் குடித்தனம், 30, 35 சம்பளமாயிருந்தாப் போருமோ யில்லியோ?" என்று கேட்டுக் கொண்டே, தான் உட்கார்ந்திருக்கு மிடத்தைச் சுற்று முற்றும் வெறிக்கப் பார்த்து அங்கே மேலான அந்தஸ்தின் அடையாளங்கள் ஒன்றையும் காணாததால், தான் பாஸ்கரையரைப்பற்றி ஊகித்தது ஸரிதான் என்று தீர்மானித்தவன் போல், மேலே, "ஆமாம், அதுக்கே ரெண்டாயிர ரூபாயெக் கொண்டாங்கிறாளுகள், காலங் கெட்டுப் போய்க் கடக்கு, ஒங்களைப்போலே ஸம்ஸாரிகளுக்கு அதுக்கு மேலே குடுக்கறதுன்னாலும் சிரமம் தானே," என்று வெகு நாளைப் பழக்கம் போல் சுவாதீனமாய்ச் சொல்லி. விட்டு "உத்தியோகம் உத்தியோகம்னு போய் விழறாளுகளே யொழிய உத்தியோகத்திலேருக்கிறவனுக்கு என்ன சௌகரியமிருக்குன்னா? நூறு ரூபா சம்பளத்தைக் கண்டு பிடிக்கிறதுக்கு மின்னாலே நாலு புள்ளை குட்டி பொறந்துடறது. ஸதா புடுங்கல்தான். கலியாணங் கார்த்தின்னா மார்வாடி கிட்டக் கடன் வாங்கறதும், அவன் மொதல் தேதிலே ஆபீஸ் வாசல்லே மறியல் பண்ரதும் தான் கண்ட பலன். செத்தா, மேஜை நாற்காலி தான் மிச்சம்" என்று அசப்பியமாகப்பேச்சை மேலும் மேலும் வளர்த்தான். அவர் தாபத்திரயத்தைக் கண்டு அனுதாபப் பட்டுச் சொல்லுவதாக அவனுக்கு அபிப்ராயம்.

பாஸ்கரையருக்குக் கோபம் ஒரு பக்கமும் சிரிப்பு ஒரு பக்கமும் குமுறிற்று. "இப்படியும் ஒரு காண்டாமிருகம் உண்டா?" என்று ஆச்சரியப் பட்டவராய், "ஆமாம், நாங்கள்ளாம் சிரம கால க்ஷேபம் செய்யரவாள்னு தெரிஞ்சிருக்கே, அப்படி யிருக்கற போது நம்மாத்துப்பையன் ஜாதகம் கேக்கரேளே, நீங்கள்ளாம் பெரிய இடமான்னா பாக்கணும்" என்று அவனை மட்டம் தட்டி விட்டதாக எண்ணி வெடுக்கென்று சொன்னார். அவனுக்கு அது உடப்பில் தைத்ததாகவே தெரியவில்லை. "இல்லெ இல்லெ, ஒங்களைப் பத்திச் சொன்னவார்த்தெயில்லே, பொதுவாகச் சொன்னேன். நீங்க சொல்றது உண்மைதான். நான் நல்ல வரனாத்தான் பாக்கறேன். எனக்கு ரூ. 50,000க்கு ஐவேஜி இருக்கு. ரெண்டு பொண்தான். ஏதோ நன்னாச் செலவெப் பண்ணிக் கலியாணத்தெப்பண்ணிக் குடுத்துட்டா நாளைக்கி சொத்துலே பாதி தானே அடையப்போறான். இப்போ மூவாயிரம் நாலாயிரம்னு கேக்கறத்தெக் குடுத்துட்டு, ஒருநாக் கலியாணம் டம் டம்னு மேளத்தெக் கொட்டிப் புட்டு அப்பறம் திரும்பிப் பாக்கறதே யில்லேன்னு ஏற்பட்டிருக்கே, அதெல்லாம் பிடிக்கல்லே எனக்கு. ஒரு நாள்கெழமென்னா மாப்பிள்ளெயெ அழைச்சு ஒரு வேஷ்டியெ வாங்கி, ஒரு பண்டம் பாடியெச் செஞ்சு, நாலு நாளைக்கி சந்தோஷமா வெச்சிண்டிருந்து அனுப்பறதா! அதெ விட்டுட்டு ஆடியும் வாண்டாம், ஆறு மாசமும் வாண்டாம் தீவாளியும் வாண்

டாம், எல்லாத்துக்கும் பணமாக் குடுத்துடுன்னு புடுங்கறதுகளே, யாருக்குப் பிடிக்கறது! கொடுக்கறமே, அதெத்தான் சேத்து வெச்சுக்கத் தெரியறதா? புள்ளேலே அரைடஜன் பொண்ணுலே அரைடஜன் இருக்கு. ஒரு சுத்துப் பாவாடை சித்தாடை வாங்கறத்துக்குத்தான் சரியாருக்கு தோப்பங்காரன் வாங்கற சம்பளம். எவனுவது ஏமாந்துபோய் மாட்டிக்கின்டான்னு புள்ளெயக்கிப் பொண்ணெக் குடுத்துட்டு, அவன் மென்னே ஓரக்க வேண்டியதுதானே," என்று பிள்ளே வீட்டுக்காரர்கள் என்ற வர்க்கத்தையே ஒரு வார்த்தையில் தூக்கி வாரியெறிந்துவிட்டு, "நான் அதிகப் பணங் காசு உள்ள எடமாப் பாக்கல்லே, பையன் நன்ருப் படிக்கறவனுக் கண்ணுக்கு லக்ஷணமாயிருந்தாப் போரும்னு தான் உத்தேசம்" என்று, தான் பாஸ்கரையர் பையன் அவ்வித யோக்கியதைகள் கூடினவன் என்று தெரிந்தே தன் மாப்பிள்ளையாகும் கௌரவத்தை யவனுக்குத் தருவதாய்த் தீர்மானித்ததை வெகு உசிதமாய்ச் சூசிப்பித்தான்.

பாஸ்கரையர் சிரித்துக்கொண்டு, "ஆமாம், படிச்சிருக்கனும்கிரேளே, நீங்கதான் உத்தியோகம் பிரயோஜனமில்லேன்னுப்பிலேருக்கே" என்றார். "வாஸ்தவந்தான், சாமாந்நிய உத்தியோகத்தைப் பத்திச் சொன்னது அது. என், ஒங்க அனுபோகத்திலே நான் சொன்னது சரிதான்னு தோணறதோல்லியோ ஒங்களுக்கு?" என்று கேட்டுவிட்டு, அவர் பதிலைச் சொல்லாமே தெரிந்துகொண்டவன்போல, "பையன் ஏதோ பெரிய படிப்புப் படிச்சிருக்கான்னு கேள்விப்பட்டேன். பெரிய உத்தியோகமானு ஆம்படையானும் பொண்டாட்டியும் எங்கேயானும் தனியாப் போயிருக்கப்போரு. கொழந்தையை சௌக்கியமா வெச்சுக்குவனெல்லியோ. அவளே ரொம்ப அருமையா வளத்திருக்கேன். இந்த வருஷம் இண்டர்மீடியட் போரு. கந்தர்வகானம், வீணெ ரொம்ப அழகா வாசிக்கரு. 'எங்கேயாவது குப்பக்காட்டிலே பணமிருக்குன்னு கொண்டே குடுத்தா சாணி தோய்க்கறதும் தினம் இரவது பேருக்குப் பொங்கறதும் மாமியார் நாத்தனர் கைலே இடிபடரதுமா யிருக்கும். போரும் நான் ஒத்தி அப்படி வாக்கப்பட்டது. குடித்தனக்காரனே வாண்டாம், யாராவது பெரிய உத்தியோகம் பண்ணக்கூடிய பையனுயிருக்கட்டும்' னுட்டா அவம்மா. எனக்கும் அதுதான் பிடிச்சிருக்கு. வெரும் பயலுக்கு 4000, 5000ன்னு கொட்டிக் குடுத்துட்டு, அவன் ஊர்லேயிருக்கிறத்தே க்ளோஸ் பண்ணிப்புட்டு நம்மகிட்டேவந்து குண்டுச் சட்டிலே குதிரை ஓட்டறத்தே, யாராவது முன்னுக்குவர்ர பையனப் பாத்துக் குடுத்தா, அதிகமாப் பணங் காசுனு கைலே கொடுத்து அவா கல்லுங் கரியா அடிக்காமப்படிக்கி, பின்னாலே சொத்து வரப் போறதுங்கரத்தெக் கொண்டு அவாளும் திருப்தியாப் போவா. ஒரு வேளே அதிர்ஷ்டவசம் பெரிய உத்தியோகமாகல்லேன்னு வீட்டோடே சிவனேன்னு கடக்குமோன்னே அனுவசிய வீச்சு வெறப்புப் பண்ணிக்காமெ, அதெத்தாம் பாக்கறேன். ஆனு நம்பாத்துக் குட்டி போற எடம் என்ன மட்டமானுலும் ரொம்ப சுருக்க ஒசந்துபூடுமாம், ஜாதகம் அப்பேர்ப்பட்ட ஜாதகம்னு பாத்த ஜோஸியன்லாம் சொல்ருன். ஒங்க பையன் ஜாதகம் கெடச்சுது, பார்த்தேன், 'ரொம்ப பொறுத்தமா யிருக்கு, இதுதான் நடக்கும்' னு மேல்மணல் ஜோஸியர்—எங்க பக்கங்கள்ளே அவர்தான் ரொம்பப் பெரிய ஜோஸ்யர்—வெகு நிச்சயமாச் சொன்னர். அதான் வந்தேன், ஊர்லெ எத்தனையோ காரியத்தை விட்டுட்டு," என்று பாஸ்கரையருக்கு வலுவிலே நல்லது செய்யத் தலைப்பட்ட தெய்வம்போல் அவர் தன்னைக் கருதவேணுமென்று சுட்டிக் காட்டும் தினுசாய்ப் பேச்சை முடித்தான்.

அவனுடைய எல்லையில்லா இறுமாப்பையும் பிறர் என்ன நினைக்கக்கூடும் என்ற கவலைக்கே யிடம் கொடுக்காத மதாந்த புத்தியையும் கண்டு பாஸ்கரையருக்கு அழுவதா சிரிப்பதா என்றுதான் தெரியவில்லை. கடிகாரத்தைப் பார்த்தார். மணி பத்தரை. "நாழியாறது, ஆபீஸ் போக

ணும்" என்று, அவனைக் கிளப்புவதை உத்தேசித்துக் குறிப்பாய்ச் சொன்னார். "ஆபீஸா, என்ன ஞாயித்திக்கழமேலே கூடவா?" என்று கேட்டுவிட்டு, ஒரு அலக்ஷியச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "அதான், ஸ்வாமி, உத்தியோகம்னாலே எனக்கு பயமாயிருக்கு!" என்று சொல்லிக்கொண்டே சட்டைப் பையிலிருந்து கசங்கிக் கிழிந்திருந்த ஒரு ஜாதகத்தையெடுத்து பாஸ்கரையர் கையில் கொடுத்தான். தான் வெளியில் ஜாதகம் வாங்கப் போன விடங்களில் ஒவ்வொருவன் பண்ணின கெட்டாங்கையும் ஆடின நிர் நாட்டியத்தையும் பற்றி நினைத்து எவ்வளவோ ஆத்திரப்பட்டும் அதை வெளிக்காட்ட முடியாமல் திண்டாடிய அவருக்கு இந்த அஸாமியிடம் ஒருவித மதிப்புக்கூட ஏற்பட்டது. "இவனைப்போல இருக்கற வாளுக்குத்தான் இதெல்லாம் லாயக்கு!" என்றெண்ணிக்கொண்டே ஜாதகத்தைப் பிரித்துப் பார்த்தார். ஸித்தார்த்தி வருஷம் ஜனனம் என்று கண்டதும் நிதானமாய் விரல்விட ஆரம்பித்தார். பெண்ணுக்குத் தகப்பன் அவருக்கு அனாவசியமாய்ச் சிரமம் கொடுப்பானேன் என்று எண்ணினவன்போல் "இப்பொதான் இரவது முடிஞ்சிருக்கு" என்று சொல்லிவிட்டு, "இந்தக் காலத்திலேதான் 15, 16-க்கு மின்னே கலியாண விஷயத்தைப்பத்திப் பிரயத்தனம் பண்ண முடியரதில்லியே. நானும் நாலு வருஷமாப் பாத்திண்டுதானிருக்கேன். அதுக்காக அவசரப்பட்டு எங்கேயாவதுகொண்டு தள்ளிப்படறதா?" என்று தானே ஆக்ஷேபணை சமாதானம் இரண்டையும் சொல்லி, "ஒங்காத்துப் பொண்ணுக்கு என்ன வயசாகறது?" என்றொரு கேள்வியும் கேட்டான். "ஆனிக்குப் பதிநாலு முடியப்போறது." "பூ! இதுக்குத்தானா இவ்வளவு அவஸரப் படரேள். இன்னம் தாராளமா ரெண்டு வருஷம் போகலாம்" என்றபிப்பிராயம் கொடுத்தான். பாஸ்கரையர் இந்த ரீதியில் ஸம்பாஷணையை நடத்த இஷ்டப்படாதவராய், கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டபடியே, "நாழியாகறதெனக்கு. ஜாதகம் ஒங்களுக்கு வேணுமானாச் சாயந் தரம் தரேன். ஆனா நான் இந்த வருஷம் கலியாணம உத்தேசிக்கல்லே" என்று முடிவு சொன்னார்.

அவன் அதை முடிவாய் ஒப்புக் கொண்டால் தானே. "ஜாதகத்தைப் பத்தி அவசியமில்லே, நீங்க பாத்துண்டாப் போரும். நான் தான் ஏற்கனவே பாத்திருக்கேனே. இதர விஷயங்களெல்லாம் ரொம்ப ஒத்துமையா யிருக்குங்கறத்தெ நீங்க கவனிக்கணம். பையன்களுக்கும் காலாகாலத்திலே கலியாணங்கார்த்தியெப் பண்ணறதுதான் தேவலெ. 'சுபஸ்ய சீக்ரம்' இப்படித்தான் ரொம்பப்பேர், 'கலியாணம் பண்ணல்லெ,' 'பையன் பண்ணிக்கல்லேனு சொல்றான்' னெல்லாம் வந்த வாளுக்கு சால்சாப்பு சொல்லி நல்ல நல்ல எடமா வரத்தெல்லாம் தட்டிப்புடறா. புள்ளெகளுக்கு அது பாட்டுக்கு வயசு வளந்துண்டு போறதுங்காத்தெ நெனைக்கிறதில்லே. 28, 30ன்னு ஆய்ட்டா அப்பறம் யாரு பொண் கொடுக்கறேங்கறா? இத்தனெ நாளாக் கலியாணம் ஆகல்லியே, இதிலே ஏதோ சூது இருக்கணும்னு சந்தேகம் வந்துடற தோல்லியோ? தவிர, 30 வயசுக்கப்பறம் கலியாணம் பண்ணிண்டா என்ன, பண்ணிக்காபோனா என்ன? எனக்கு 16 வயசுலே கலியாணம், 18 ஆவது வயசிலே டாண்ணு மொதக்குட்டி பொறந்துட்டா! நேத்திக்கி ஆங்கரேயிலே எம்மச்சினன் புள்ளெய்க்கிக் கலியாணம், பயலுக்கு இன்னம் 16 கூட ஆகல்லே. சாரதா ஆக்டு சீர்தா ஆக்டுன்னு எல்லாரும் பயமுறுத்தினான். எம்மச்சினன் அதெல்லாம் ஒண்ணும் லக்ஷியம் பண்ணல்லே, 'போடா நல்ல எடமா யிருக்கு, இதை விடப்படாது. நம்ம மேலே புகார் பண்ணிப்புட்டு ஆங்கரேலே ஒரு பய ஒரு நாழி காலந்தள்ள முடியுமா, தொலைச்சுப்பிடமாட்டேனா!" ன்னுட்டுக் கலியாணம் பண்ணிப்புட்டான். அவன் தலையெக் கிள்ளிப்புட்டாளோ?" என்று கொக்கரித்தான்.

ஆங்கரை என்றதும் பாஸ்கரையருக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஆங்கரைங்கிறீளே, அங்கே ஜாஸ்தி பிரஹ சரணம் போலேன்னா யிருக்கு?" என்றார்.

அவன் "ஜாடா பிரஹசரணம்தான், வேறே கலப்பே கிடையாது" என்று அழுத்தந்திருத்தமாய்ச் சொன்னான். "அப்போ நீங்க?" "ஏன், நானும் பிரஹசரணம் தான், அஸல் மாங்குடி. என்ன ஸந்தேகம் வந்துது ஒங்களுக்கு?" "இல்லை, நாங்க வடமாள்" என்று சொல்லும்போதே, அவனுக்குப் பெருத்த ஏமாற்றமும் வருத்தமும் உண்டாகுமே யென்றெண்ணினவர்போல் கொஞ்சம் அனுதாபம் பாஸ்கரையர் முகத்தில தெரிந்தது. அவர்கவலைப் பட்டது முற்றிலும் அனாவசியம் என்றது அவன் அடுத்தாப்போல் சொன்ன வார்த்தையிலிருந்து வெட்ட வெளிச்சமாய் விளங்கிற்று. "அதனாலென்ன? வடமாளுக்கும் பிரஹசரணத்துக்கும் இப்போ எவ்வளவோ பெரிய எடங்கள்ளேல்லாம் சம்மந்தம் நடக்கறதுன்னா! படிச்சு உத்தியோகம் பண்ணற நீங்கள்ளாம் இந்த பயித்தியார வித்தியாசமெல்லாம் கொண்டாடலாமா? எனக்கு ஆக்ஷேபணை யில்லை ஸார்," என்று அவருக்கு ஞானோபதேசம் பண்ண ஆரம்பித்தான். அவருக்குத் தலை தெரிக்கும் கோபம் வந்துவிட்டது. "நாங்கள்ளாம் இன்னம் அவ்வளவு நாகரிகமாகல்லே! சரி,நாழியாகறது, நான் வரேன்", என்று அவனை வாசலில் தள்ளிக் கதவைச் சாத்துவார் போல வேகத்தைக் காட்டவே, அவன் ஸாவதானமாய் எழுந்திருந்து, "அவஸரமில்லே, யோஜிச்சுச் சொல்லுங்கோ. இந்த வருஷமில்லேன்னா அடுத்த வருஷம் பாத்துக்கறது" என்று அவையடக்கித் தான் கொடுத்த கிழிசல் ஜாதகத்தையும் கையில் எடுத்துக்கொண்டு வெளியே சென்றான். கதவைத் தாழிட்டு இலையில் சாப்பிட உட்கார்ந்த அவர் தன் ஸம்ஸாரம் "நாழியாச்சுன்னுட்டு இத்தனை நாழி யாருண்டே வம்பளக்கப் போய்ட்டேள்?" என்று கேட்டதற்குப் பதில் சொல்ல முடியாமல் விழுந்து விழுந்து சிரித்ததைக்கண்டு அந்த அம்மைக்குக் கவலை யுண்டாய்விட்டது.


## முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை
பாதுகாப்பு
துரிதமான பட்டுவாடா
முழு திருப்தி
ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்!

**தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

மவுண்ட் ரோட், சென்னை

போன் : 8558

தந்திவிலாசம் :— "வான்கார்ட்"

# சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

(வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.)

1927-ம் வருஷத்தின் முற்பகுதியில் மகாத்மா காந்தியவர்கள் சென்னைக்கு விஜயம் செய்வதா யிருந்தது. சென்னையிலுள்ள மாணவர்களுக்கும் கதர் இயக்கத்தில் ஏற்பட்டிருந்த ஊக்கத்தைத் தெரிவிக்க அத்தருணத்தைப் பயன் படுத்தி, அம் மாணவர்களால் ஒரு பணமுடிப்பு அவருக்கு அளிக்கப்படவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. இதற்கு முயற்சி யெடுத்துக்கொண்டவர் ஒரு பிரபலத் தென்னிந்திய அரசியல் தலைவர். இந்நற்காரியத்தில் தன்னுடன் உழைக்க இவர் சில இளந் தொண்டர்களின் உதவியை நாடினர். பத்திரிகையில் இதைப்பற்றி இவர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி சென்னை ராஜதானிக் கலாசாலையைச் சேர்ந்ததும் திருவேட்டீசுவரன் பேட்டையிலுள்ளதுமான ஒரு மாணவரில்லத்திலிருந்து இவருக்கு உதவி செய்ய எங்களுள் சிலர் முன் வந்தோம். இந்நிதிக்குச் சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியின் காரியதரிசி, பொக்கிஷதாரராக நியமிக்கப் பட்டார். வசூலித்த பணங்களெல்லாம் மயிலாப்பூரில் லஸ் சர்ச் ரோட்டிலுள்ள அந்தப் பாங்கியில் செலுத்தப்படவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. இவ் வசூலிப்பு விஷயமாய் தலைவர் அந்தப் பாங்கியின் கட்டிடத்தில் 1927-ம் வருஷம் ஜனவரிமீ 13-ந்தேதியன்று தொண்டர்களைக் கூட்டி ஆலோசனை செய்கையில் முதல் இருநூறு ரூபாய்களை எவன் வசூலித்துப் பாங்கியில் சேர்ப்பிக்கிறானோ அவனுக்கு ஒரு தங்கப் பதக்கம் அளிப்பதாகத் தெரிவித்தார். இதை எங்களுள் சிலர் ஆக்ஷேபித்தோம். எங்கள் கக்ஷி, கதர் இயக்கத்தின் உண்மையான நோக்கத்தை நன்கு உணர்ந்து அதன் முன்னேற்றத்தைக் கோரியே தொண்டர்களை உழைக்கச் செய்யவேண்டுமே யொழிய, பதக்கத்தைப் பெறுவதற்காக ஊழியஞ் செய்வதாக இருக்கக்கூடாதென்பதே. அதற்கு அத்தலைவர் "பரவாயில்லை. இப்பொழுது அப்படிச் சொல்லிவிடுவோம். பின்பு பதக்கம் தராமலிருந்துவிடலாம்" என்று சமாதானஞ் சொன்னர். இந்த யோசனை எதிர்ப்பை முன்னிலும் அதிகரிக்கச் செய்தது. முன்பே நாங்கள் எடுத்துக் காட்டிய தோஷத்துடன் ஆசை காட்டி மோசஞ் செய்வதென்னும் தோஷமும் உண்டாகும் என்று நாங்கள் வாதித்தோம். எப்படியாவது பணம் சேரவேண்டுமென்ற ஒரே எண்ணத்தையுடைய அவர் கக்ஷியே ஜெயித்தது. முதல் இருநூறு ரூபாய்களையும் நாங்களே வசூல் செய்து பதக்கத்தை வாங்க மறுத்துவிடுவதென்று உறுதி செய்துகொண்டு அதை நிறைவேற்றியும் விட்டோம்.

இத் தலைவர்தான் சென்னை மாகாணத்திற்குப் பெரும் பேரும் மதிப்பும் தேடிக் கொடுத்திருக்கும் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரென்னும் பெரியார். இச் சம்பவம் இவருடைய குணுதிசயங்களில் ஒரு முக்கிய அம்சத்தை எடுத்து விளக்குகிறது. அதாவது இவருக்கு லக்ஷியந்தான் முக்கியமேயொழிய அதைச் சாதித்துக்கொள்ளக் கையாளப்படும் முறையின் தூய்மை அவ்வளவு முக்கியமில்லை. லக்ஷியம் மட்டும் உயர்ந்ததாய் இருக்கவேண்டும்; கட்டாயம் இருந்தே தீரும்; ஆனல் எப்படியாவது அதைச்சாதிக்கத்தான் இவர் முயலுவாரேயொழிய அதற்காகத் தான் கைக்கொள்ளும் வழிகளின் தன்மை எதுவாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்த மாட்டார். அரசியல் துறையிலும் சமூகச் சீர்திருத்தத்திலும் வெகுவாய் அடிபட்டிருக்கும் இவருக்கு முறைகளும் லக்ஷியத்தைப் போலவேயே எப்போதும் பரிசுத்தமா யிருக்கவேண்டுமென்று பார்த்தால் நினைத்த காரியம் கைகூடாதென்று

நன்கு தெரியும். "அச்வத்தாமோ ஹத: குஞ்சர:" ("இறந்தான் அச்வத்தாம னென்ற யானை") என்னும் வஞ்சனைக் கூற்றைச் சொல்ல அஞ்சி தருமபுத்திரர் மறுத்திருப்பாரானல் பாண்டவர்கள் மகா பாரத யுத்தத்தில் எவ்வாறு ஜெயித்திருக்க முடியும்? முடிவில் தர்மம் வெல்லுவதற்கு யுதிஷ்டிரர் சொன்ன இச் சிறு பொய்யி லுள்ள அதர்மமும் ஓரளவு துணையா யிருந்த தல்லவா?

இவர், 1879-ம் வருஷத்தில் பிறந்தவர். வடகலை வைஷ்ணவ சமூகத்தில் நல்லான் சக்கரவர்த்தி யென்னும் பெரியாரின் வழி யில்வந்தவர். ஆனல் வாழ்க்கையில் 'எல் லோரும் ஒரு குலம்' என்னும் கொள்கை யைத் தீவிரமாய்ப் பின்பற்றி ஜாதி பேதங் களையும் தீண்டாமையையும் தகர்க்க உழைத்திருப்பவராகையால் இவரை எந்த இனத்தையும் சேராதவர் என்றுகூடச் சொல்லிவிடலாம். சேலம் ஜில்லாவில் ஹோசூர் தாலுக்காவிலுள்ள ஒரு சிறு கிராமந்தான் இவர் பிறந்த ஊர். முதலில் பங்களூரிலுள்ள சென்ட்ரல் காலேஜிலும், பின்பு சென்னை ராஜதானிக் கலாசாலையி லும் இவர் தன் உயர்தரக் கல்வியைப் பயின் ருர். பின்பு சென்னை சட்ட கலாசாலையில் சட்டப் படிப்பு பயின்று சேலத்தில் ஒரு வக்கீலாகத் தன் வாழ்க்கைப் போரைத் தொடங்கினர். அத் தொழிலில் கூடிய சீக்கிரத்தில் முதன்மை ஸ்தானமும் பெருத்த வருவாயும் அடைந்தார். வக்கீல் தொழிலின் இரு பகுதிகளான 'ஸிவில்' 'கிரிமினல்' என்பனவற்றுள் 'கிரிமினல்' என்னும் பகுதியிலேயே அதிகமாகப் பழகி இவர் வெகு சமர்த்தரெனப் பெயர் பெற்ருர். கொலை முதலியவை போன்ற வழக்குகளை வாதிப்பதில் இவருக்கிருந்த திறமைக்கு அறிகுறியாக அக்காலத்தில் இவரைப்பற்றி வழங்கிய ஒரு நாடோடிக் கூற்றைக் குறிக்கலாம். சேலம் ஜில்லா வின் ஊர்கள் ஒன்றில் தெருவின் வழியே இருவர் போய்க்கொண்டிருக்கையில் ஒரு வன் மற்றவனைப் பார்த்து,

'ஏலே, உன்னெ குத்திக் கொன்னுப் போட்டுடுவேண்டா' என்பான். மற்ற வன் அதற்கு, 'நீ அப்படிச் செஞ்சா ஒன்னே சர்க்காரிலே தூக்குப் போட்டுட மாட்டாங்களாடா?' என்று பதிலளிப் பான். 'அட போடா பைத்தியக்காரா. அரசமரத்தய்யிரு இருக்காங்களே எனக் கென்னடா பயம்?' என்பானும் கொலை செய்வதாக மிரட்டிய முதல்வன். இச் சம்பாஷணையில் 'அரச மரத்தய்யிரு' என்று குறிப்பிடப்பட்டவர் வக்கீல் சக்கர வர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.

இவ் வக்கீல் தொழிலை இவர் 1900 முதல் 1918 வரையிலுள்ள 18 வருஷங் கள் சேலத்தில் நடத்தியபின் 1919-ம் வருஷத்திலிருந்து சிறிது காலம் சென்னை யிலும் நடத்தினர். 1920-ம் வருஷத்தில் மகாத்மா காந்தி யவர்கள் வகுத்த திட் டப்படி இவர் தன் வக்கீல் தொழிலைத் துறந்தார். அப்படித் துறந்தவர் நாளது வரையில் அதை மீண்டும் தொடங்காம லேயே யிருக்கிருர். அதுவும் அப்பொ ழுது இவரைப்போல் அத்தொழிலைக் கை விட்டவர்களுள் பலர் மறுபடியும் அதைக் கைக்கொண்டிருந்தும்!............

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் 'காந்தீயம்' என்று சொல்லப்படும் கொள் கைகளை நடைமுறையில் கடைப்பிடித் துக் காட்டி வந்திருப்பவர் தென்னிந்தி யாவில் ஒருவர் உண்டென்ருல் அவர் இச் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தான்; இதனுற்ருன் இவரைத் 'தென் னிந்திய காந்தி' யென்று கூடப் பலர் குறிப்பிடுகின்றனர். இதைத் தவிர "ராஜாஜி" என்னும் அருமைப் பெயரும் இவருக்கு வாய்ந்திருக்கிறது. 'பாபுஜி' என்று மகாத்மா காந்தியவர்கள் அழைக் கப்படுவதுபோல், சென்னையிலும் பிற வூர்களிலும் இவரை 'ஸி. ஆர்.' என்று இவர் பெயருக்கு முன்னுள்ள இரண் டெழுத்துக்களால் மட்டும் பலர் அழைக் கின்றனர். இவையெல்லாம் பிறருக்கு இவரிடமுள்ள மதிப்பையும் அன்பையும் குறிக்கின்றன. பம்பாயில் ஸர்தார் வல்ல பாய் படேலும், பீஹாரில் பாபு ராஜேந் திர பிரஸாதும் இருப்பதுபோல் சென்னை யிலும் ராஜாஜி காந்தியத்திற்கு ஒரு தூண் போல் விளங்குகிருர். எனவே அதற்கு அடிப்படையான கொள்கைகளான தீண்

டாமையை யொழித்தல், மதுவிலக்கு, கதரைப் பரவச் செய்தல், ஹிந்திப் பிரசாரம், அரசியற் போரில் சத்தியாக்கிரக முறையையே கைக்கொள்ளுதல் என்பனவையே வாழ்க்கையில் இவருடைய முக்கிய லக்ஷியங்கள்.

பொதுவாகத் தென்னிந்திய தேசீயத் தலைவர்கட்கு வட இந்தியாவில் அதிக மதிப்புக் கிடையாது. பலருடைய பெயர்களைக்கூட வடக்கேயுள்ள மாகாணவாசிகள் கேட்டிருக்கமாட்டார்கள். சென்னை ஒரு பிற்போக்கான மாகாணம் என்பது இவர்களுடைய எண்ணம். ஆனால் இவ்விதிக்குப் புறம்பாய் நிற்பவர் ராஜாஜி. மகாத்மா காந்தியின் சகாக்களுள் இவருக்குத்தான் மற்றவர்களைவிடச் செல்வாக்கு அதிகம் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கோஷ்டியினரைத் தவிர மிதவாதிகளும் மற்றும் பலரும் இவரிடம் அதிக மதிப்பு உள்ளவரா யிருக்கின்றனர். வங்க மாகாணத்தில் டாக்டர் பிதான் சந்திரராய், பீஹாரில் டாக்டர் ராஜேந்திரப் பிரஸாத், ஐக்கிய மாகாணத்தில் அவ்வூரின் மாஜி காங்கிரஸ் பிரதம மந்திரி கோவிந்த வல்லப பந்த், மத்திய மாகாணத்தில் ஸேத் ஜம்னுலால் பஜாஜ், பம்பாயில் முன்ஷியும் புலாபாய் தேசாயும், மைசூரில் சமீபகாலம் வரையில் அச் சமஸ்தானத்தில் திவானாக இருந்த ஸர் மிர்ஜா இஸ்மெயில், ஹைதராபாதின் மாஜி மந்திரி ஸர் அக்பர் ஹைதரி, திருவாங்கூரின் திவான், ஸர். ஸி. பி. ராமசுவாமி அய்யர், மத்திய சர்க்காரின் தலைநகரான டெல்லியில் கனச்யாம்தாஸ் பிர்லா, இந்தியா முழுவதுக்குமே உரியவரான மகாத்மா காந்தியவர்கள் இவ்வளவு பேர்வழிகளும் இவருக்கடக்கம் என்று சொன்னாலும் அது மிகையாகாது. இவர் சென்னை மாகாணத்திற்கு காங்கிரஸ் அரசின் கீழ் பிரதம மந்திரியானபின் இவருக்கு உள்ளடங்கிய மேற்கூறிய பிரமுகர்களின் கோஷ்டியில் சென்னையின் மாஜி கவர்னர் எர்ஸ்கின் பிரபுவும், சென்னையிலேயே தீவிர அரசியல்வாதத்தில் அதிகம் கலந்துகொள்ளாத ஸர் மகம்மத் உஸ்மான், ஜி. ஏ. நடேசன் முதலியோர்களும், மற்றும் பல ஐரோப்பியர்களும் சேர்ந்துகொண்டனர் என்றால் இவருடைய பரந்த செல்வாக்கைக் குறிப்பிட வேறு அறிகுறியும் வேண்டுமா?

பல வருஷங்களாக காந்தீயத்தின் தீவிரக் கொள்கைகளைக் கடைப்பிடித்த ஊழியம்; அதற்கிடையே சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டு மும்முறை அநுபவித்த சிறைவாசம், இவைகளுக்குச் சிகரம்போல் கடைசியில் விளங்கியதும் காங்கிரஸ் பிரதம மந்திரியாகச் சென்னை மாகாணத்தில் $2\frac{1}{4}$ வருஷங்கள் இவர் புரிந்ததுமான திறமையான அரசு, அதன் பின்பு ஐரோப்பிய யுத்த நெருக்கடியால் மீண்டும் ஒரு முறை சிறைவாசம்—இவைதான், இவருடைய அரசியல் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள்.

சமூகச் சீர்திருத்தத்தில் இவர் விசேஷப் பற்றுடையவர். முக்கியமாய் தீண்டாமையை ஒழிக்கவேண்டு மென்பதை ஒரு விரதமாகப் பூண்டவர். தான் செய்யும் பிரசாரங்களை இவர் தன்னுடைய சொந்த வாழ்க்கையிலேயே நேரில் நடத்திக் காட்டியிருக்கிறார்.

வேறொரு சமயத்தில் தீண்டாமையை ஒழிக்க இவர் செய்துவந்த காரியங்களில் ஒன்றைக் குறித்து இவருடைய தந்தையார் மனங்கலங்கி இவருக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலாக இவர் தம் முன்னோருள் ஒருவரான நல்லான் சக்கரவர்த்தியென்னும் வைஷ்ணவப் பெரியார் செய்த அரியவொரு சமூகச் சீர்திருத்தக் காரியத்தைச் சுட்டிக்காட்டினார். தந்தையாரும் சமாதானமடைந்தார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியும் இவர் நோக்கத்தைக் கவர்ந்திருக்கிறது. தற்காலத்திய தமிழ் எழுத்தாளர்களுள் முன்னணியில் நிற்பவர்களில் ஒருவர் இவர். சிறு கதைகள் எழுதுவதில் இவர் திறமை வாய்ந்திருக்கிறார். வாழ்க்கையில் இவருக்குள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதில் சிறு கதையை ஒரு சிறந்த கருவியாய்ப் பயன்படுத்திக்கொள்ள இயலுமென்பதை இவர் நன்கு உணர்ந்திருக்கிறார். ஆகையால் இவருடைய கதைகளெல்லாம், தீண்டாமையை யகற்றல், மதுவிலக்கு, கதர்

இயக்கத்திற்கு ஆதரவு அளித்தல், முதலிய ஏதாவது ஒன்றை நீதியாகப் போதிக்கும் முறையில் அமைந்திருக்கும். இத்துடன் இவருடைய கதைகள் பலவற்றுள் ஏழை மக்கள் படுந்துயரத்தை — அதிலும் வறுமையின் கொடுமையால் பெண்டிர் தூய வாழ்வை இழத்தலை சொற்களினால் அழகாகச் சித்தரித்துப் படிப்போரின் உள்ளத்தை உருகச்செய்திருக்கிறார்.

பண்டைக்கால இலக்கியங்களில் இவர் வெகுவாக ஈடுபட்டிருக்கிறார். திருவள்ளுவரிடம் இவருக்குப் பற்றுதலிருத்தலைத் திருக்குறள் பொருட்பாலிற்கு, இவர் ஆங்கிலத்தில் கொடுத்திருக்கும் மொழிபெயர்ப்பின் மேன்மையிலிருந்து அறியலாம். வடமொழியிலுள்ள வேதகாலத்திய தொன்மையான நூல்களிலும் இவருக்கு விசேஷப் பற்றுண்டு. உபநிஷதக் கதைகளையும் நீதிகளையும் பகவத்கீதையில் கண்ணன் போதித்துள்ளதையும் எல்லோருக்கும் எளிதில் புரியும் நடையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி விளக்கியிருக்கிறார்.

இவர் இயற்றியிருக்கும் இலக்கியத் தொண்டிற்கு இவருடைய சிறைவாசம் பெரிதும் பயன்பட்டிருக்கிறது. இவர் எழுதியுள்ள நூல்களில் பல சிறையில் தனக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தில் எழுதியனவே.

விஞ்ஞானமென்று குறிக்கப்படும் மேல் நாட்டுப் பூதபௌதிக சாஸ்திரங்களைத் தமிழில் எழுதிப் பரவச்செய்தல் என்னும் நற்காரியத்திலும் இவர் வழிகாட்டியிருக்கிறார். இவர் எழுதிய 'தமிழில் முடியுமா?' என்னும் பௌதிக சாஸ்திர நூலையும் 'கலைச் சொற்கள்' என்னும் நூல் வெளிவர இவர் செய்திருக்கும் உதவியையும் இதற்கு அறிகுறியாகச் சொல்லலாம்.

பல விஷயங்களில் இவருக்கிருக்கும் உண்மையான திறமை, மாகாணங்களில் காங்கிரஸ் பதவியேற்றதன் பயனாக இவர் சென்னையின் முதல் மந்திரியான பின்பு தான் உலகத்தாருக்குப் புலப்பட்டது. பொறுப்புள்ள நிர்மாண வேலைகளை நிர்வகிப்பதில் இவர் எத்தனை திறமை வாய்ந்தவர் என்பது, அப்பொழுதுதான் தெரிந்தது. குட்டித் துரைமுகநிதி யென்னும் பிரிவில் நெடுநாளாய்க் குவிந்து துருப்பிடித்துக் கிடந்த ஒரு பெரும் பொக்கிஷத்தைப் புதையல்போல் தேடி எடுத்து அதைக் குடிகளுக்குப் பயன்படும் வழியில் செலவழிக்க இவர் திட்டஞ் செய்தது இவருடைய அபார நிதி நிர்வாகத் திறமையை யெடுத்துக் காட்டுகிறது. ஏழு காங்கிரஸ் பிரதம மந்திரிகளுள்ளும் இவர்தான் முதன்மை ஸ்தானம் வகித்தார் என்பதிலும் இவர் அரசுபுரிந்த சென்னை மாகாணத்தில்தான் குடிகள் காங்கிரஸ் ஆட்சியின் பலன்களை பரிபூரணமா யடைந்தார்கள் என்பதிலும் ஒருவித ஆச்சரியமுமில்லை. இவர் முயற்சியால் அமுலுக்கு வந்த மதுவிலக்குச் சட்டம், கடன் நிவாரணச் சட்டம், அதிகார வர்க்கத்தில் உயர்தரப் பதவிகளுக் கேற்பட்டிருந்த பெருவாரியான சம்பளங்களைக் குறைத்து மாகாண நிர்வாகச் செலவில் சிக்கனஞ் செய்தது, ஜில்லா போர்ட்டுகளின் எண்ணிக்கையைக் குறைத்தது, இவைதான் இவர் செய்த நற்காரியங்களுள் முக்கியமானவை.

இவர் பிரதம மந்திரியானபின் இவருக்கு இயற்கையாயுள்ள பேசுந் திறமைபதின் மடங்கு மேலும் சோபித்து விளங்கியது. சர்க்கார் தரப்பில் இவர் செய்து வந்திருக்கும் சொற்பொழிவுகளை எல்லாக் கட்சியினரும் ஆவலுடன் விரும்பிக் கேட்டுக் களித்தனர். இவர் சிலரைப்போல் வேகமாய்ப் பேசமாட்டார். ஆனால் இவர் பேச்சில் இடையிடையே தடங்கல்களும் ஏற்படாது. சொல்லுவதை நிதானமாகச் சொல்லுவார். தெளிவாகச் சொல்லுவார். அவை பசுமரத்தாணிபோல் கேட்போரின் மனத்தில் படிந்து விடும்படிச் சொல்லுவார். தன்னை எதிர்ப்போர் தன் சொற்பொழிவைக் கேட்டுவிட்டு ஒன்றும் ஆக்ஷேபணை சொல்லமுடியாமல் தவிக்கும் ரீதியில் இவர் பேச்சு அமையும். இம்முறையில் இவர்,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ
லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து"

என்னும் குறள் நீதியைப் பின்பற்று கிறார் போலும்!

இவர் பேசுவது சில சமயத்தில் ஒரு 'கிரிமினல்' வக்கீல், தன் வழக்கை வாதிப்பது போலிருக்கும். சொல்லும் விஷயம் கடினமாயிருந்தால் அதை ஓரிரண்டு முறைகள் திரும்பத் திரும்பச் சொல்லுவார். இவர் சொற்பொழிவுகளிலும் சம்பாஷணையிலும் நகைச் சுவை கலந்திருக்கும். எதிராளியைக் கண்டிக்க விரும்பினல் சுறுக்கென்று படக்கூடிய முறையில் தன் கூற்றுக்களை அமைப்பார்.

நெடுநாட்களாய்ப் பழகியிருப்போரும் கண்டிராத புதிய உண்மைகளை இவர் தன் சொற்பொழிவுகளில் எடுத்துச் சொல்லுவார்! இதைக் கேட்டதும் 'இவ்வளவு நாட்களாய் நாம் இதை உணரவில்லையே' என்று அவர்களெல்லோரும் பிரமிப்பார்கள். இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம். இவர் ஒரு முறை கல்கத்தாவிலுள்ள தென்னிந்தியர்க ளடங்கிய ஒரு கூட்டத்தில் பேச நேர்ந்தது. அக்கூட்டம் தென்னிந்தியர்கள் கட்டிய ஒரு பள்ளிக்கூடக் கட்டிடத்தை யொட்டியுள்ள ஒரு சிறு இடைவெளியில் நடந்தது. பொழுது போக்குக்காக இவர்கள் நடத்திவந்த ஒரு சங்கமும் அக்கட்டிடத்திலேயே நடந்து வந்தது. அச்சங்கம் அக் கட்டிடத்தின் சில பகுதிகளை உபயோகித்து வந்ததற்காக மாதா மாதம் கொடுத்து வந்த வாடகை பள்ளிக்கூடத்திற்கு ஒரு வருமானமாய் உதவியது. இதையெல்லாம் கேட்ட இவர் தன் பேச்சைத் தொடங்குகையில்,

"நான் இதுவரையில் காணுத ஒரு விசித்திரமான இடம் இது. இங்குக் குழந்தைகள் படிக்கிறார்கள், வயதானவர்கள் விளையாடுகிறார்கள்" என்று சொன்னதும் கூட்டத்திலுள்ளவர்கள் கொல்லென்று நகைத்தனர்.

ராஜகோபாலாச்சாரியாரின் பிரசங்கங்களின் முக்கியமான அம்சம் அவர் எடுத்தாளும் உவமைகளே. விஷயம் பெரிதானுலும், சிறியதானுலும் ஒரு உவமைமூலம் அவர் அதை எடுத்து விளக்கி விடுவார். உபநிஷதக்கதைகளைப் படித்து அவைகளின் அழகை ஊன்றியனுபவித்ததன் பலன்தானிது என்று எண்ண இடமிருக்கிறது. ஏனெனில் தாங்கள் உலகுக்களித்த அரிய வேதாந்த உண்மைகளை விளக்குவதற்கு வேத ரிஷிகள் தக்க உபமானங்களின் உதவியையும் கதைகளின் உதவியையுமே நாடி யிருக்கின்றனர். தன்னுடைய அரசாட்சி சம்பந்தமாய் இவரும் உவமை யென்னும் அணியை வெகுவாய்ப் பயன்படுத்திக் கொண்டார். இவர் உவமையினல்தான் அரசுபுரிகிறார் என்றுகூடச் சிலர் சொல்லி வந்தனர். இவருடைய உவமைக்கு உதாரணமாய் அடியிற் கண்டவைகளைக் குறிப்பிடலாம்.

ஹிந்தி யெதிர்ப்பு இயக்கம் பலமாயிருக்கையில் சென்னைக் கடற்கரையில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் இவர், "ஹிந்தியைப் பரவச் செய்வதில் உறுதி கொண்டிருக்கும் எங்கள் சர்க்கார் இவ்வெதிர்ப்புக்களைக் கண்டு பயந்து கொஞ்சங் கூடப் பின்வாங்கப் போவதில்லை. அப்படிச் செய்வது எதை யொத்திருக்குமென்றால் தண்டகாரண்யத்தினுட் புகுந்தவுடன் காலில் முள்தைத்ததென்று ராமன் அயோத்திக்குத் திரும்புவது போலிருக்கும். முள்ளைப் பிடுங்கிவிட்டு மேற் சென்றால்தானே ராவணவதம் என்னும் நற்காரியம் நடக்கவியலும்" என்றார்.

கடன் நிவாரண மசோதா விவாதத்திலிருக்கையில் எதிர்க் கக்ஷியைச் சேர்ந்த ஒருவர், "அவசரப்பட்டு ஒன்றும் செய்துவிடக்கூடாது. நம் மாகாணத்தில் மக்கள் எவ்வளவு தூரம் கடன் பட்டிருக்கிறார்கள், என்பதற்குத் தகுந்த புள்ளி விவரங்கள் கிடைத்த பின்புதான் இதை ஆலோசிக்க வேண்டும்" என்று சொன்னதற்கு, இவர் விடையாக அளித்த உபமானம் எல்லோருக்கும் நினைவிலிருக்கும். இவர் சொன்னது வருமாறு:—"சென்னையில் கொசு உபத்திரவம் இருக்கிறதென்றால் நாம் செய்ய வேண்டியது என்ன? மைலாப்பூர் கொசு அதிகமா, திருவல்லிக்கேணி கொசு அதிகமா என்றெல்லாம் புள்ளி விவரங்களைத் திரட்டிக் கொண்டிருக்க முடியுமா? ஒரு கொசுவலையை

வாங்கி அத்துயரத்தைப் போக்குவோமல்லவா? அதேமாதிரியே நாட்டில் கடன் சுமை யதிகம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எல்லோரும் அறிந்ததே. ஆகையால் இம்மசோதாவைச் சட்டமாக்கிக் கால தாமதம் செய்யாமல் இத்தொல்லையினின்றும் நாம் நம்மை விடுவித்துக் கொள்ளுவோம்."

இவர் கையாண்ட உவமைகளுக்குள் பிரசித்தமடைந்துவிட்டது எதுவென்றால்மாஜி காங்கிரஸ் தலைவர் சுபாஷ்சந்திரபோஸைக் குறித்து இவர் அகில இந்தியக் காங்கிரஸ் மகாநாட்டில் சொன்னதுதான். காந்தீயத்தைப் பின்பற்றிய வார்தா கோஷ்டியை எதிர்த்த போஸ் கக்ஷியைச் சேரவேண்டாமென்று எச்சரிக்கை செய்யவந்த இவர் "பார்வைக்குப் பகட்டாயிருக்கும் இப்படகில் ஏறுதீர்கள், அது ஓட்டையுள்ளது, ஆற்றைக் கடக்க உதவாது, நடுவில் மூழ்கிவிடும்." என்று குறிப்பிட்டது தேசமெங்கும் போற்றப்பட்டதுடன் போஸ் கக்ஷியினருக்கும் பெருத்த எரிச்சலை யுண்டாக்கியது.

இவர் தோற்றத்தில் வெகு சாதுவாயிருப்பார். நெடுநாளாக வழுக்கைத் தலை. சற்றுக் கூன்விழுந்த நடை. நீண்ட முகமும் மூக்கும். இவருடைய கண்களிலுள்ள ஒளியை ஒருவரும் பார்க்கமுடியாமல் இவர் சதா அணிந்துவரும் ஒரு நீலநிறப் புகைக் கண்ணாடி மறைக்கிறது. தமிழ் நன்றாய் எழுதவும் பேசவும் வரும். இவர் அசல் தமிழரில்லை யென்றால் அது சற்று நம்பத்தகாததாகவே யிருக்கும். ஆனால் இவரை ஒரு கன்னடக்காரர் என்றாலும் பொய்யாகாது. மைசூரைச் சுற்றிலுமுள்ள பல்லாரி, அனந்தபூர், சேலம், கோயம்புத்தூர் முதலிய ஒவ்வொரு சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஜில்லாவிலும் மைசூர் சமஸ்தானப் பிரதேசத்தை யொட்டி சில ஊர்களோ தாலூக்காக்களோ உண்டு. இவைகளிலுள்ள ஜனங்கள் நடையுடை பாவனைகளில் மைசூர்காரர்களையே ஒத்திருப்பார்கள். சேலத்திலுள்ள ஹோசூரும் கோயம்புத்தூரிலுள்ள கொள்ளேகாலும் இத்தன்மையனவே. ஏன், 'ஹோசூர்' என்னும் பெயரிலேயே மைசூர் மணம் வீசவில்லையா? இவருடைய நெருங்கிய பந்து ஒருவர் எனக்கு மிகப் பழக்கம். அவர் தமிழ் பேசுவது எங்களுக்கு நகைப்பை யுண்டாக்கும். கன்னடத்தைத் தாய்மொழியாய்க்கொண்டு புதிதாய்த் தமிழ் பயின்று பேசுவதுபோலிருக்கும். இந்த ஹோசூரைச் சேர்ந்த இவரை அசல் தமிழர் என்று எப்படிச் சொல்லலாம்?

தான் பின்னாலேயே யிருந்து பிறரைக்கொண்டு தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளுவது இவருடைய காரியங்களில் இவர் கைக்கொள்ளும் முறைகளின் முக்கிய அம்சம். இதை ஒரு பொம்மலாட்டத்தில் திரைக்குப் பின்னால் நின்றுகொண்டு நூலை இழுத்துப் பொம்மைகளை ஆட்டிவைக்கும் சூத்திரதாரிக்கு ஒப்பிடலாம். இவர் தூண்டிவிடும் மனிதர்கள் காரியத்தைத் தாங்கள் சாதிப்பதாகவே நினைப்பார்கள். ஆனால் நிறைவேறுவதென்னமோ இவருடைய லக்ஷியந்தான்.

இவர், தான் செய்யுங் காரியங்களைப் பற்றி வெளி ஆடம்பரங்கள் ஒன்றும் செய்யமாட்டார். ஆதலால் இவருடைய காரியங்களில் எதை எடுத்துக்கொண்டாலும் அதில் எவ்வளவு நாட்களாக இவர் ஈடுபட்டிருக்கிறா ரென்பது பிறருக்குத் தெரியாது. அவ்வளவு அடக்கமாய் அதைச் செய்து வந்திருப்பார். உதாரணமாகப் பூத பௌதிகம் முதலிய சாஸ்திரங்களைப் பற்றிய நூல்களைத் தமிழிலேயே எழுதவேண்டுமென்று இவருக்கிருந்த ஆசை சமீபத்திலுண்டானதல்ல. சுமார் 25 வருஷங்கட்கு முன்பே சேலத்தில் வக்கீலா யிருக்கையிலேயே இவரும் வேங்கடசுப்பய்யர் என்று ஒருவருமாகச் சேர்ந்து "தமிழ்ச் சாஸ்திரச் சொற்கள் சங்கம்" என்று ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து அதன் சார்பில் ஒரு பத்திரிகையும் தொடங்கினார்கள். இவருடைய காரியங்கள் ஒவ்வொன்றிலும் இதே விதமான நீடித்த உழைப்பையே காணலாம்.

ஒவ்வொரு விஷயத்தையும்பற்றி நன்றாய்த் தெரிந்து கொள்ளவேண்டுமென்பது இவருடைய கொள்கை. உதாரணமாக, இவருடைய வீட்டிற்கு யாராவது ஒரு வைத்தியன் வந்து, மருந்து எழுதிக்

கொடுத்தால் அம்மருந்தில் உள்ள ரஸாயனப் பொருள்களின் தன்மைகள், அவை அதில் சேர்க்கப்படும் காரணம், முதலியவை போன்றவைகளைப் பற்றி அந்த வைத்தியனை இவர் கேட்கும் கேள்விகள் அவனை அலற வைத்துவிடுமாம். இதை இவருடைய நெருங்கிய உறவினர் ஒருவரே என்னிடம் பன்முறை சொல்லியிருக்கிறார்.

இவர் அஞ்சா நெஞ்சமுத்த முள்ளவர். இல்லாவிடில் சமூகச் சீர்திருத்தம், தேசியப்போர், காங்கிரஸ் ஆட்சியில் பிரதமமந்திரி வேலை, இவை ஒவ்வொன்றிலும் இவருக்குஏற்பட்டிருந்த பலத்த எதிர்ப்பைச் சமாளித்துக்கொண்டு தன் எண்ணங்களை நிறைவேற்றுவதென்பது வேறு எவராலும் முடிந்தேயிராது.

---


மார்பு, சுவாஸகோசக் கோளாறுகளுக்கு



அவனுக்கு

ஸிரோலின் ரோச்

கொடுங்கள்

அசட்டை செய்தால் அபாயகரமான வியாதிகளுக்கு வழியாகும். ஸிரோலின் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஒன்றுபோல் மிகக்குணமுள்ள சுவாஸகோச டானிக்.

# விஞ்ஞானமும் கற்பனைத்திறனும்

(டி. பி. நவநீத கிருஷ்ணன், எம் ஏ., அண்ணாமலைநகர்)

விஞ்ஞானம் சலித்து ஆராயப்பட்ட அனுபவ நிகழ்ச்சிகளையும், பருப்பொருள் பாற்பட்ட சோதனைகளையும் ஆதாரமாய்க் கொண்டது. கற்பனை என்பது மனத்தின் கண்ணே தோன்றும் காட்சிக் கியலானது. அது, பருப்பொருள் பாற்படாதது. இத்தன்மையினதான கற்பனை, விஞ்ஞானத்துடன் எவ்வாறு தொடர்புடையது என எவரும் வியப்புறலாம். முதற்கண் வியப்பே தோன்றினும், நன்கு சிந்திக்குங்கால், கற்பனைத்திறனே விஞ்ஞானத்திற்குப் பேருதவி யளித்துள்ளது என்று தெளிவாகும்.

விஞ்ஞான வழியே பொருள்களை ஆராயும் முறை மூன்று முக்கிய தலைப்பிலடங்கும். அவையாவன: பகுத்தறிதல், தொகுத்தறிதல், பகுத்தலாலும் தொகுத்தலாலும் அறிந்தவற்றை ஒழுங்கு படுத்தி, பலவகை நிகழ்ச்சிகளிடை யுள்ள தொடர்புகளை யறிதல் என்பனவேயாம். இம்மூன்றில், பகுத்தறிதலும் தொகுத்தறிதலும் யாவர்க்கும் இயன்றதே. அப்பணியாற்றுதற்கு வேண்டியன, பேருழைப்பும் ஊக்கமும் விடாமுயற்சியுமேயாம். மூன்றாவதாகிய, தொடர்பை யறிதல் எனும் பணியாற்றுதற்கு ஆழ்ந்த சிந்தனையும் நுண்மாண் நுழை புலனும் அவசியம். இவற்றின் கலவை, கற்பனைத் தோற்றத்துடன் தொடங்குகின்றது.

டிண்டல் (Tyndall) என்ற விஞ்ஞான அறிஞர், மிக்கச் சொல்வன்மையுடன் கூர்த்த மதியை யுணர்த்தியதான சொற்பொழிவொன்றில், கற்பனா சக்தி, விஞ்ஞான ஆராய்ச்சிக்கு இன்றிமையாதது என நன்கு எடுத்துக்காட்டி யுள்ளனர். "காரணங்களால் கட்டுப் படுத்தப்பட்ட கற்பனா சக்தியே விஞ்ஞான ஆராய்ச்சியாளரின் சிறந்த கருவி" என்றும், "மக்கள் அறிவு விரிந்து கொண்டே செல்லும் ஆற்றல் படைத்துள்ளது. இவ்வாற்றல் ஆக்கும் சக்திக்கு நிகரானது. அது, உண்மை யாது என்பதைப் பற்றியும் சிதறிக் கிடக்கும் பல பொருள்களைப் பற்றியும் ஆழ்ந்து நெடிது சிந்தனை செய்வதால் ஏற்படும்" என்றும் அவர் கூறியுள்ளார். அவர் கூறியதில் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, "காரணங்களால் கட்டுப் படுத்தப்பட்ட கற்பனா சக்தி" என்ற சொற்றொடரேயாம். மனம் போன போக்கெல்லாம் உழலும் கற்பனா சக்தி வீணானதேயாம். தக்க முறையில் கட்டுப் படுத்திக் குறித்ததொரு பொருளைப்பற்றி உள்ள மூன்றிய சிந்தனை வழியே ஏற்படும் கற்பனா சக்தியே பலன் தருவதாம்.

விஞ்ஞானீயக் கற்பனை வெறும் கற்பனையினின்று வேறுபட்டதாம். அக்கற்பனை, சோதனை வழியே கண்டவற்றை அறிவின் துணை கொண்டு ஆராயுங்கால் தோன்றுவது. கற்பனை வழியே பெற்ற கருத்துக்கள் பின்னர் சோதனை வாயிலாய் ஆராயப் படுகின்றன. சோதனையில் வெற்றி பெற்ற கொள்கைகளே பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இவ் வெற்றியே கற்பனையின் திறனை நிலைநாட்டுவதாம். வெறும் கற்பனையின்வழியே விளைந்தவைகள் எப்பொழுதும் சோதனை வாயிலாய் நிலைநாட்ட இயலாதவை. கற்பனா சக்தி ஏன் இவ்வாறு வேறுபடவேண்டும்? என்பதற்கு நாம் காரணம் அறியோம். ஒருவகையான சிந்தனை மட்டும் ஏன் மேலானதா யிருக்கவேண்டும் என்ற வினாவிற்கும் விடையளிக்க இயலாதுள்ளோம். ஹாப்கின்ஸ் (Hopkins) என்ற கணித நூலறிஞர், க்ளார்க் மாக்ஸ்வெல் (Clerk Maxwell) என்ற விஞ்ஞான அறிஞரைப் பற்றி " அவ் வறிஞரால் தவறான முறையில் சிந்திக்கவே முடியாது " என்று ஆணித்தரமாய்க் கூறியுள்ளார். முக்கியமான பெருங் கருத்துக்கள் பல, சிலர் மதியில் அவரறியாதே தோன்றி, வளர்ச்சி யடைந்து வெளிப்பட்டவை. சிலர் மட்டும் இயல்பாய்ப் பெற்றுள்ள

இவ்வுயரிய வகையான கற்பனை சக்திக்குக் காரணம் யாது என்பதை ஒருவாறு விளக்கலாம். எவ்வுயிரும் உள்ளதைச் சிறப்பித்து ஆக்கும் வகையில் செல்லும் இயல்பினை யுடையது. மூளையில் நாமறியாது வேலை செய்யும் அபூர்வ சக்திகள் பல இருக்கலாம். அச்சக்திகள் குறித்த சில வழிகளில் செலுத்தப்படும்போது அரும்பெரும் முடிவுகளைப் பெறலாம். அம்முடிவுகளை நேரே நிரூபிக்கவும் முடிகின்றது. வேறு வழிகளில் செல்லும் சக்திகள் பலவாருய்ச் சிதறி பயன் பெருது வீணுகின்றன. குறித்த வழிகளில் செலுத்தும் வகைகள் எவை யென்பதை மட்டும் நாமறியாதுள்ளோம்.

விஞ்ஞானத்தால் புகழப்படுகின்ற பேரறிஞர் கற்பனைத் திறன் கொண்டே பல பெரும்பொருள்களைக் கண்டனர் என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகள் கூறலாம்.

'விஞ்ஞானம் தோற்றுவித்த நியூடன்' (Newton) எனச் சிறப்பிக்கப்படும் மூதறிஞர், மனத்தை ஊன்றிச் சிந்தனைசெய்து, கற்பனையையும் கலந்ததால் பல விஞ்ஞான உண்மைகளைக் கண்டார். அவர் பெயருடன் என்றும் சேர்ந்து விளங்கும் நிலக்கவர்ச்சிக் கொள்கையே, (Theory of Gravitation) அவராற்றியவைகளில் தலை சிறந்தது. அக் கொள்கையி லடங்கிய விதிகளை அவர் கிரகித்தது, உய்த்தறிதல் - பகுத்தறிதல் - சிந்தனைசெய்து தொடர்பறிதல் என்ற மும்முறையும் கலந்த ஒரு சக்தியினுலேயே யெனலாம். டைகோ ப்ராகி (Tycho Brahae), கெப்ளர் (Kepler), கோபர்னிகஸ் (Copernicus) இன்னோரன்னவான நூல் வல்லுனர்கள் தம் பேருழைப்பினுலும், அளவை செய்யும் திறனுலும், திரட்டிய ஏராளமான எண்ணியல் அளவைகளைப் பற்றி ஆராய்ந்து ஆழ்ந்து சிந்தனை செய்ததால், நிலக்கவர்ச்சி விதிகளை அவர் அனுமானிக்க இயன்றது. அனுமானித்ததை சரிதானுவெனச் சோதித்தார். அதாவது, தன் விதிகளின் பிரயோகத்தால் பல ஆகாயக் கோள்களிடையுள்ள கவர்ச்சித் தொடர்பு எவ்வாறிருக்க வேண்டும் என்று கணக்கிட்டார். நேரே அளவிடப்பட்டவற்றிற்கும், தான் கணக்கு முறையால் கண்டுபிடித்த ஈவுகளுக்கும், பொருத்தம் உண்டா என்று பரிசீலனை செய்தார். சிறிது முரண்பாடு இருந்ததைக் கண்டார். எனவே, தான் அனுமானித்த விதிகள் சரியானவையன்று வென முடிவு கட்டி, அவற்றை வெளியிடாது விடுத்தனர். பல ஆண்டுகளுக்குப் பின், தன் கணக்கில் சிறு பிழை யொன்று செய்துவிட்டதைக் கண்டார். அப் பிழையைத் திருத்தியபின்பு கணக்கியல் முடிவுக்கும், விதியியல் முடிவுக்கும், பொருத்த மிருந்ததைக் கண்டார். அதன் பின்னரே தன் விதிகளைக்கொண்ட கொள்கையை வெளியிட்டார். நியூடன் நிலக் கவர்ச்சி விதிகளைக் கண்டுபிடித்ததைப் பற்றிய கதையொன்று வழங்கி வருகிறது. அதைப் பற்றிச் சிறிது கூறுவோம். அவர் ஆழ்ந்து சிந்தனை செய்தவண்ணம் ஒரு மரத்தினடியில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அவர் தலைமீது ஒருபழம் விழுந்தது. அந்நிகழ்ச்சி அவரைத் திடீரென எழச் செய்தது. அக உலகினின்றும் புற உலகிற்குத் தம்மைக் கொணர்ந்த நிகழ்ச்சியைப்பற்றி எண்ணலானுர். பழம் மேலே செல்லாது ஏன் கீழ விழவேண்டும்? என்று சிந்திக்கலானுர். காரணமறியு முகத்தால், நிலக்கவர்ச்சி விதிகள் அவர் மனத்தில் உதித்தன. இவ்வாறு சிறியதோர் சம்பவத்தினின்றும் பெரியதோர் உண்மை வெளிப்பட்டது எனக் கதை வழங்குகின்றது. அக்கதை உண்மையா? அன்ரு? என்பதைப் பற்றி நாம் ஆராயவேண்டாம். உண்மையெனவே கொள்ளலாம். "திடீரென நிலக் கவர்ச்சியின் தன்மை அவர் உள்ளத்துதித்தது" எனும் விவரத்தைப் பற்றி மட்டும் ஆராய்வோம். அக்கருத்து சடுதியில் தோன்றி யிருக்கலாம். ஆனுல், அத்தோற்றத்திற்குக் காரணம், அவர் அதன்முன் சிந்தனை செய்துகொண்டிருந்த பொருளே யெனலாம். கெப்ளர், டைகோ ப்ராகி முதலியோர், ஆகாயக் கோள்களின் சலனங்களைப்பற்றி வெளியிட்ட எண்ணியல் வரலாறுகளைப் பற்றியே அவர் அம்மரத்தின்கீழ் சிந்தனை செய்துகொண்

டிருந்தனரோ, என்னவோ? பழம் விழவும், நடந்த அந் நிகழ்ச்சிக்கும், தம் சிந்தனைப் பொருளுக்கும் இடையுள்ள தொடர்பு அவர் அகக்கண்ணில் பட்டது எனலாம். எனவே சிந்தனையிற் றோய்ந்து விரிந்த நோக்கத்துடனிருந்த நியூடனின் சீரிய மதியே, அரும் பெரும் கருத்துக்கள் முளைத்தற்கேற்ற நிலமாய் அமைந்தது எனலாம். இதனாலேயே பேராசிரியர் டிண்டல், "கீழ்விழும் பழத்தினைக் கண்டு சந்திர சலனத்தைக் கிரகிக்கும் மதி" என்று நியூடனின் மதிச் செல்வத்தைப் பாராட்டுகின்றார். இப்பெரும் பிரமாண்டத்திற்கே பொதுவான விதிகளை நியூடன் கண்டு பிடித்ததை "கற்பனா சக்தியின் பெரிய தாண்டவம்" என மற்றொரு விஞ்ஞானி புனைந்துரைக்கின்றார்.

நியூடன் சேர்த்த மூலதனத்தைப் பல வகையிலும் பெருக்கியவர் என்று அழைக்கப்படும் பாரடே (Faraday) யெனும் விஞ்ஞானத் துறவியும் மிகச்சிறந்த கற்பனா சக்தியுடன் விளங்கியவரே. அவர், உலகத்தோர் பெரிதென மதிக்கும், பதவி - பெருமை - புகழ் பொருள் இன்னோரன்னவற்றை வேண்டாமென்றுத் தள்ளிவிட்டு, விஞ்ஞான ஆராய்ச்சியையே தமது வாழ்க்கையின் இலட்சியமாய்க் கொண்டு, அதனிலேயே ஈடுபட்டு மூழ்கியவர். அவர், தம்மைக் கவர்ந்த ஆராய்ச்சிப் பொருள்களை, தம் மனமுழுதையும் கொள்ளை கொள்ளும் வண்ணமாக்கி சிந்தனை செய்யும் பேற்றி வாய்ந்தவர். உறுதியான ஆழ்ந்த கருத்தூன்றிய சிந்தனையாலும், செயலாற்றும் திறமையாலும், அவர் பெரும் பயன்களைப் பெற்றார். அவரது கற்பனையின் ஆற்றலே, மின்காந்த இயலைக் கண்டுபிடித்தது. மின்காந்த இயக்கவியலைக் (Electro-magnetic Induction)க் கொண்டே, உலகெங்கணுமுள்ள மின்னுக்க இயந்திரங்கள் வேலை செய்கின்றன. இன்று உலகத்தைத் தன் வயமாய்க் கொண்டுள்ள மின்சார சக்திக்கு அடிகோலியவர், பாரடேதான்.

டார்வின் (Darwin) என்ற உயிர் நூல் முதறிஞர் இளமையிலேயே உயிரினங்களைப் பற்றி அறிவதில் ஊக்கங் கொண்டனர். பின்னர், 'பீகள்' (Beagle) என்ற கப்பலில் சென்று உலக முழுதும் சுற்றிப் பார்த்தனர். ஆங்காங்குள்ள பல பொருள்களைப்பற்றியும் ஆராய்ந்தனர். பல ஆராய்ச்சிப் பொருள்களைத் திரட்டினர். தம் நாடு திரும்பியதும் அவற்றை வகையீடு செய்தார். எல்லா உயிரினங்களிடையுள்ள அங்க அமைப்பு, ஒற்றுமைகளைக் கண்டார். பல்வேறு உயிரினங்கள் அடிப்படையான உயிரினம் ஒன்றினின்றே, உள்ளது சிறத்தலால் பல்வேறு வகையினவாயின எனும் பரிணாமக் கொள்கையை, அவர் நிலைநாட்டினார். சலியாத உழைப்பும், உற்றுக்காணும் வெற்றியும், வரையறுத்து வகையீடு செய்யும் வன்மையும், விரிந்த நோக்கமும், கருமமே கண்ணாயின உறுதியும், வெறுத்தல் உவத்தலின்றி சீர்தூக்கிக் காணும் பகுத்தறிவும், நீண்டகால அனுபவப் பயிற்சியும், செறிந்த கற்பனா சக்தியுடன் கலந்ததால் பரிணாமப் பேருண்மையானது டார்வின் மனத்திலே மலர்ந்தது.

இங்ஙனம், விஞ்ஞானத்தை வளர்த்த முதுபேரறிஞர் யாவரும் விஞ்ஞான ஒழுங்குமுறைக் கருவிகளுடன், அவற்றினும் மேம்பட்ட கற்பனையின் ஆற்றலையும் பெற்றதனால், சிறப்பான விளைவுகளை அடைந்தனர். அப் பெரியார்களது கற்பனைத்தோற்றங்கள் மனக் குழப்பத்தைப் பயக்காது, தெளிவை யுண்டாக்கும் தன்மையினவை. அவரது ஆர்வத்தைக் கண்டோர், கற்பனாசக்தி அவர்களை உபயோகித்ததேயன்றி, அவர்கள் கற்பனா சக்தியை உபயோகித்தவரல்லர், என்றே எண்ணினர்.


ஸில்வானியஸ். பி. தாம்ஸன் (Sylvanius. P. Thomson) என்னும் விஞ்ஞான அறிஞர் கூறுவதாவது :

"உற்றுக் காணல், அனுபவ முதிர்ச்சி, பகுத்தறிதல், ஆழ்ந்த சிந்தனை இவையாவும் இன்றியமையாதவையே; ஆனால் இவைமட்டும் போதா. பேரறிஞர் பெற்ற அருஞ் சக்திக்கு இவற்றையன்றி வேறோர் காரணமும் இருத்தல் வேண்டும். தர்க்கத்திலும், அறிவியலான பகுத்தறிதலினும், தேர்ச்சி பெற்றவர்மாட்டுள்ள ஆற்றலைவிட அச் சக்தி, மேலானதாயிருத்தல்

டெலிகிராம்ஸ்: "ஆர்யோபிளான்ட்ஸ்" டெலிபோன்: (கல்கத்தா) 1048. (2 லைன்கள்)

# பெங்கால் ஷேர் டீலர்ஸ் ஸிண்டிகேட் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:—3 & 4, ஹேர் தெரு, கல்கத்தா.



சௌரங்கி ஸ்கொயரில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் எங்கள் சொந்த கட்டிடங்கள். ஷை கட்டிடத்தின் அஸ்திவாரக்கல்லை 1941ளு ஜூலை 31உயன்று ஆச்சார்யா ஸர் பி. ஸி. ராய் அவர்கள் நாட்டினர்.

கிளை ஸ்தாபனங்கள்:
ஜம்ஷெட்பூர், பெனரிஸ், பகல்பூர், பாட்னு, கோமில்லா, கர்ஸியாங், திப்ருகார், டினஜாபூர், பாங்கூரு & மதறாஸ்.

அதிகாரம் பெற்ற மூலதனம்
ரூ. 25 லக்ஷம்

சேகரித்த மூலதனம்
ரூ. 8,90,000

வசூலிக்கப்பெற்ற மூலதனம்
ரூ. 2,95,000

கம்பெனி வேலை செய்யத் தொடங்கிய முதல் வருஷத்திலேயே 10% வீதம் டிவிடண்ட் (வருமானவரி இன்றி) வழங்கப்பெற்றது. 1941ளு செப்டம்பரில் முடிய இரண்டாவது வருஷத்தின் முற்பாதிக்கு ஓர் இடைக்கால டிவிடண்ட் வழங்க உத்தேசித்திருக்கிறது.

பிக்ஸட் டிபாஸிட்டுகள் ஒரு வருஷத்திற்கு 5% வட்டி வீதம் நாங்கள் பெற்றுக் கொள்ளுகிறோம்.

**நாங்கள் எல்லாவிதமான பங்கு விற்பனைகளிலும், கவர்ன்மெண்ட் ஸெக்யூரிட்டிகளிலும் லேவாதேவி செய்கிறோம்.**

எங்கள் "மாதாந்திர ஷேர் மார்க்கெட் ரிப்போர்ட்"டுக்கு எழுதவும். வருஷ சந்தா ரூ. 3.
மாதிரி பிரதிக்கு எழுதுங்கள்.

**இந்த ஸிண்டிகேட்டின் பாக்கி ஷேர்களை விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.**

எங்கள் சென்னை கிளை ஆபீஸ் ஆகஸ்ட் 1உ முதல், மாஜி ரயில்வே ரேட்ஸ் அட்வைஸரி கமிட்டி ஸூப்பிரண்டண்ட்டாயிருந்த ராவ் சாஹேப் நடேச அய்யர் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் 12, தம்பு செட்டித் தெருவில் நடத்தப்படுகிறது.

வேண்டும். திறன்மிக்க நுண் கலையாளரும், கவி வல்லுனரும், இயல்பாய்ப் பெற்றுள்ள அருங் கற்பனாசக்தி போன்றதொன்றே விஞ்ஞானப் பெரியாரும் பெற்ற அரிய வரப்பிரசாதமாம்."

விஞ்ஞான முறைகள், அறிவின் பாற்பட்டவை. கற்பனை, உணர்ச்சியின் பாற்பட்டது. ஆதலின் கற்பனையால் தூண்டப்பட்ட விஞ்ஞானிகள், தம் கற்பனையின் விளைவை நேரே கண்டபோது தம் உணர்ச்சி மேலீட்டால் மெய் மறத்தல் இயல்பே. கிடைத்தற்கரிய பெரும்பேற்றைப் பெற்றவர் போன்றே, விஞ்ஞானத்துயர்ந்த பேரறிஞரும், தம் ஆராய்ச்சியின் விளைவைப் பெற்ற காலத்து, பேருவகை எய்தினர். புற உலகை மறந்து, தம்முணர்வின்றி ஆராய்ச்சி செய்தனர். ஓவியன், சித்திரம் தீட்டும்போதும், கவிஞன் செய்யுள் யாக்கும்போதும், பக்தன் துதிக்கும் போதும் பெறுகின்ற பரவசத்துடனேயே விஞ்ஞானப் பேரறிஞரும், தம் ஆராய்ச்சியில் ஈடுபட்ட காலத்து காணப்படுகின்றனர்.

அடக்கத்திற்கு உறைவிடமாகிய பாரடே, மின்காந்தவியல் பற்றிய ஆராய்ச்சியிலீடுபட்டு, தாம் கற்பனையால் கண்டவாறே காந்தமுள்ளொன்று துள்ளுவதைக் கண்ட பொழுது, தம் உள்ளத்தெழுந்த மகிழ்ச்சியை அடக்க இயலாது," கூத்தாடுகின்றன, பார், எப்படிக் கூத்தாடுகின்றன, பார்" என்று பாடிக்கொண்டு தாமும் கூத்தாடினர்.

இடையறாது கதிர் வீசும் இரேடியம் (Radium) என்னும் அரிய உலோகத்தைக் கண்டெடுத்தவர், க்யூரி என்னும் அம்மையார். (Madame Curie) செயற்கரிய ஆராய்ச்சிகள் செய்து, இரேடியத்தைத் தனியே அவர் பிரித்தெடுத்தார். மலை போன்ற மாசை நீக்கி, அணுவனைய உலோகத்தைப் பெற்றார். அப்பெரும் முயற்சியில் எத்தனையோ புதுவகையான இயைபு (Chemical) மாற்ற முறைகளைக் கண்டு பிடித்தார். இரவு பகலாய்ப் பல்லாண்டுகள் சலிப்படையாது தம்பணி செய்து வந்தார். அவ்வாராய்ச்சியில், விஞ்ஞானப் பேரறிஞரான பியரிக்யூரி (Pierre Curie) என்ற அவர் கணவரும், கலந்து கொண்டார். இருவரும் தம் கைப்பணம் முழுவதையும் அப்பொருளைப் பெறும் ஆராய்ச்சியிலேயே செலவழித்தனர். தாம் பிரித்தெடுக்கமுனைந்த பொருளின் தோற்றமும், தன்மையும் எவ்வாறிருக்கும் என்பதை இருவரும் பன்முறை நினைந்து கற்பனைக் கண்ணால் கண்டனர். கற்பனை வழியே, அப்பொருள், தானே ஒளிரும் தன்மையினதாயிருக்க வேண்டும் என்று அவர்கள் அறிந்திருந்தனர். தம் ஆராய்ச்சியின் இறுதி நிலைமையில், அது மிகச் செறிந்த கரைசலினின்று (Concentrated Solution) தேங்கி வெளிப்படுமாறு செய்து விட்டு, ஒரு மாலைக் காலத்தில் தம் வீடேகினர். ஏதோ கருதி, இரவு இருவரும் தம் சோதனை மன்றத்திற்குச் சென்றனர். கதவைத்திறந்தனர். சிறிதே மங்கிய நீலமயமான ஒளிக்கதிர்கள் அச்சிற்றறையில் நிலவுவதைக்கண்டனர். க்யூரி அம்மையார், இரேடியம் மிளிர்ந்த கலத்தினருகிருந்த நாற்காலியில் சாய்ந்தார். தொட்டிலில் கிடத்தப்பட்ட குழந்தையைக் குனிந்து நோக்கும் அன்னை போன்று முன்னே குனிந்து, கனிவுடன் இரேடிய மணியை நோக்கினர். கொழுநனைத் தன்னருகில் வருமாறு அழைத்தனர்; கை பிணைத்துக்கொண்டார்; மணியைத் தன் கணவனுக்குச் சுட்டிக் காட்டினர். கண்ணை மூடிக்கொண்டார். பியரிக்யூரி, தன் அருமை மனைவியின் உச்சிமோந்து நின்றார். அவள் கண் திறந்தாள். இருவரும், தம்மகவைப் பெற்றகாலத்து அடைந்த மகிழ்ச்சியை, அறிவித்த முகங்களுடன் ஒருவரையொருவர் நோக்கினர்.

எனவே, விஞ்ஞான முன்னேற்றத்திற்கு உணர்ச்சியின் பாற்பட்ட கற்பனா சக்தி அருந் துணையாயுள்ளது என அறிகிறோம். இக்கற்பனா சக்தி, பயனற்ற மனோராச்சியமன்று எனவும் அறிகிறோம். பேருழைப்பு, ஆழ்ந்த சிந்தனை, பரந்த பயிற்சி இன்னோரன்னவற்றில் தோய்ந்த கற்பனா சக்தியே பயனுடைத்தாகும். பெரும் விளைவுகளைத் தந்த கற்பனா சக்தியால் தூண்டப்பட்டு, விஞ்ஞானிகள் இன்னும் பல நலங்களை உலகிற்

களிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், கற்பனையின் போக்கு, பருப் பொருள்களைப் பெருக்கும் வழியே மட்டும், செல்லாது; அவற்றால் விளையும் நலங்களை எல்லோரும் அடைவதற்கான வழிகளைக் காணும் துறையில் இனிச் செல்லவேண்டும். சென்ற காலத்தில், பொருட் குறைவால் மக்களின்; பொருளியல் ஏற்றத் தாழ்வு இன்றியமையா திருந்தது. இன்றோ, விஞ்ஞான விளைவியல் பெருக்கத்தால், அந்நிலைமையை மாற்றிப் பலரும் பொருள் தரும் நலங்களைப் பெறுமாறு செய்ய இயலும். இதற்கு, சமூக முன்னேற்றத்தைக் கோரும் வழியிலே சிந்தனை செல்லவேண்டும். விஞ்ஞானிகள் பொருளாக்கத்தைப்பற்றி மட்டும் கருதுவதை விடுத்து, அப்பொருள்களைப் பலரும் பெறுவதற்கான வழிகளைப்பற்றிக் கருத வேண்டும். இவ்வழியே சமூக அமைப்பு எவ்வாறிருக்கவேண்டும் என்பதற்கான திட்டங்களைக் கற்பனை வாயிலாய்ப் பெற வேண்டும். கற்பனையால் பெற்றதை செயல் முறையில் நிறுவவேண்டி, மக்கள் எல்லோரும் விஞ்ஞானீய முறையில் சிந்தனை செய்யுமாறு தூண்டவேண்டும். விஞ்ஞானிகள் உலக சமாதானம், உலகினர் பொதுநலம், என்பவற்றின் பாற்பட்ட கற்பனையில் மூழ்கவேண்டும். பின், அவற்றை அனுபவத்திலும் நிலைநாட்ட வேண்டும். இலட்சிய நிலைமை நிறுவிய போதே, விஞ்ஞானம் தன் பணியை ஆற்றினதாகும். விஞ்ஞானிகள் எல்லோரும் சமூகவியலான சிக்கல்களை நீக்கித் தம் விளைவியல்கள் பயன்படுவதற்கான வழியைத் தேடவேண்டும். அவ்வழியிலே தம் கருத்தை யூன்றிச் சிந்தனைசெய்ய வேண்டும்; தம் கற்பனையின் ஆற்றலைக் காட்ட வேண்டும். உலக மக்கள் எல்லோரும் நோயற்ற வாழ்வையும் குறையற்ற செல்வத்தையும் பெறும் முறையைக் காண வேண்டும். அப்பொழுது மண்ணுலகிலேயே அமரர் நிலையெய்தும்நல்வழி ஏற்படும். இதற்கான விதியியல், முறை செயல் முறையிலும் கடைப்பிடித்தற்கானவாறு அரசியல், சமூக அமைப்பு நிறுவப்படும். "எல்லோரு மோர் குலம், எல்லோரு மோரினம், எல்லோரு மோர் மக்கள், எல்லோரு மோர்விலை, எல்லோரும் நாட்டு மன்னர்" என்ற கவியின் தோற்றம், கனவன்று. விஞ்ஞான உண்மை என நிலை நாட்டிய நாளிலேயே, விஞ்ஞானிகள் தம் உண்மை வெற்றிக் கொடியை நாட்டியவர் ஆவர்.

# அப்பர் சுவாமிகள்

வே. நாராயணன், எம்.ஏ., எம்.எல்.

தமிழ் நாட்டிலே பெண்ணையாறு பாயும் பிரதேசத்திலே திருவாமூர் என்னும் சிவஸ்தலம் ஒன்று இருக்கிறது. இங்கே பல நூற்றாண்டுகளுக்கு முன்னே சைவ வேளாளர் குடியிலே புகழனார் என்று ஒரு பெரியார் இருந்தார். அவரது மனைவியின் பெயர் மாதினியார். இவர்களுக்கு திலகவதி என்று ஒரு பெண்ணும் மருள்நீக்கி என்று ஒரு பிள்ளையும் பிறந்தார்கள். திலகவதிக்குத் திருமணத்திற்குரிய பருவம் வந்ததும் அவளைக் கலிப்பகை என்னும் வீரன் மணக்க விரும்பினான். திலகவதியின் பெற்றோர்களும் திருமணத்திற்கு இசைந்தார்கள். ஆனால் திருமணமாகுமுன் கலிப்பகை அரசனாணையால் போருக்குச் செல்ல நேர்ந்தது. காலகதியிலே புகழனார் மரிக்கவே, மாதினியார் உடன்கட்டை ஏறினார். பெற்றோரை இழந்த தம்பிக்கு ஆதரவாகத் திலகவதியார் இருந்து வரும் நாளில், போரிலே கலிப்பக்கையார் உயிர் நீத்தார் என்ற செய்தி அறிந்து, அவரை மணந்து கொள்ளாவிடினும் அவரையே தன் கணவனாகக் கருதிய திலகவதியார் உயிர் துறக்க விரும்பினார்; "பெற்றோரை இழந்த வருத்தத்தை நான் அறியாதவாறு என்னை ஆதரித்த நீங்களும் உயிர் நீத்தால் நான் என்ன செய்வேன்?" நானும் உங்களோடு உயிர் விடுவேன் என்று மருணீக்கியார் புலம்பக் கேட்டு, 'தம்பி உயிர் வாழ்வதற்கு தாம் உயிர்தாங்கி யிருக்க வேண்டியது கடமை என்று கைம்மை நோன்பை மேற்கொண்டார் திலகவதியார்.

அந்த நாட்களிலே சமணமதம் மேலோங்கி இருந்தது; வைதிக மதத்தைச் சேர்ந்தவர்கள் பலர் சமண மதத்தைத் தழுவுவோர் ஆனார்கள்; பல்லவ மன்னனும் பாண்டிய வேந்தனும் சமணர்களாகி சமணமதத்தை ஆதரிப்பவர்கள் ஆனார்கள் சமணர்களும் தீவிரமாக மதப்பிரசாரம் செய்தார்கள். இளவயதினரான மருணீக்கியார் சமணமதக் கொள்கைகளைக் கற்க விரும்பி பாடலி புத்திரத்திலே யிருந்த சமணமடம் ஒன்றிலே சேர்ந்துவிட்டார்; தம்முடைய தமக்கையார் என்ன சொல்லியும் கேட்கவில்லை; அறிவை வளர்க்கும் ஆசையினால் சமண நூல்களை யெல்லாம் கற்றுத் தேர்ந்தார்; அவருடைய கல்வியை மெச்சிய சமணர்கள் அவருக்கு தருமசேனர் என்று பெயர் கொடுத்தார்கள். அக்காலத்திலே பிரசாரத்தில் இருந்த பௌத்தமதக் கொள்கைகளைக் கண்டித்து வாதாடி வெற்றிபெற்றார்; அதனால் அவரைச் சமணர்கள் தங்கள் சமயத் தலைவராகக் கொண்டாடினார்கள்.

தம்பியாருக்காக உயிர் துறவாதிருந்த திலகவதியாருக்கு அவர் இவ்வாறு தாம் பிறந்த சைவ வைதீக மதத்தைக் கைவிட்டு வேத விரோதமான வேறொரு மதத்தைக் கைக்கொண்டது ஆறாத துயரத்தை விளைத்தது.

தம்பியார் தம்மை விட்டகன்றபின், திருக்கோயிலில் பணிசெய்து கிடப்பதே தம் கடன் என்று கொண்டு திருவதிகை வீரட்டானத்திற்குச் சென்று அங்கே தினந்தோறும் அதிகாலையில்எழுந்திருந்து, கோயிலிலே திருவலகு பணி மாறுவதும் சாணத்தால் திருமெழுகு இடுவதும் மலர் கொய்து கொண்டுவந்து திருமாலைகள் தொடுப்பதும் ஆன திருப்பணிகள் செய்து வந்தார்.

பரம்பரையாகக் கையாண்டு வந்த சநாதன தருமத்தை அனுஷ்டிப்பதிலே தம்பியாரைப் பழக்கியது எல்லாம் வீணாயிற்றே என்று திலகவதியார் அடிக்கடி வருந்துவார்· "சிவனே! என் தம்பி இவ்வாறு நாசம் அடைவது உன் கருணைக்கு ஏற்குமோ?" என்று புலம்புவார் "எனக்காக வேணும், என் தம்பியைத் தடுத்தாட்கொள்ள வேண்டும்" என்று சிவபெருமானை வேண்டுவார்.

இன்ஷ்யூர் செய்யுங்கள்!

# ஜூபிடர் ஜெனரல்

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்:

ஆயுள், மோட்டார், நெருப்பு, பஸ், டாக்ஸி, கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரெயில்வே, தபால்

**பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**

வாக்களிக்கப்பட்ட மூலதனம்:

## ஒன்றரைக்கோடி ரூபாய்

**எங்கும் ஏஜண்டுகள் தேவை**

பிராஞ்சு ஆபீஸ்:

"ஜூபிடர் ஹௌஸ்", 167, பிராட்வே, மதராஸ்.

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்

# அமிர்தாஞ்சன் லிமிடெட்

அமிர்தாஞ்சன் கம்பெனியார் தங்களுடைய அபிமானிகளுக்குத் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், யுத்த காரணமாக அரசாங்கத்தில் தகரக் கட்டுப்பாடு செய்வதால் தற்காலிகமாக அட்டைப் பெட்டிகளில் அஞ்சனத்தை அடைத்து அனுப்ப ஆரம்பித்திருக்கிறோம். ஆனால் அஞ்சனத்தின் குணத்தில் எவ்வித மாறுபாடும் இல்லை என்பதைத் தெரிவிப்பதுடன் அன்பர்களின் மேலான ஆதரவையும் எதிர்பார்க்கிறோம்.

**அமிர்தாஞ்சன் லிமிடெட்,**

பாம்பே, : மதராஸ், : கல்கத்தா.

இவ்வாறு பணி செய்து கிடக்கும் அடியார்களையும் அவர்களைச் சேர்ந்தார்களையும் தாங்குதல் பரமேசுவரனுடைய பொறுப்பன்றோ? பரம்பரை யடியார்களின் வமிசத்திலே பிறந்த பழவடியாரான மருணீக்கியாருக்கு இருந்த பரசமயப் பற்று நீங்கும் காலம் வந்தது; மருணீக்கியாருக்கு சூலைநோய் வந்தது; மருந்தாலும் மந்திரங்களாலும் அந்தக் கொடிய நோய் அகலவில்லை. யாதொரு நோயும் பீடிக்காதவாறு தம்மை இளமையிலே தாயார் போலப் போற்றிவளர்த்த தமக்கையாரின் ஞாபகம் எழுந்தது. அவர் திருவீரட்டானத்திலே கோயிற்பணி செய்து வாழ்கின்றார் என்பதை அறிந்து கொண்டு, அங்கே சென்று அவரடியிலே வணங்கி "சூலை நோய் நஞ்சாகி வந்து என்னை நலிகின்றதே! என்ன செய்வேன்?" என்று கதறினார். தமக்கையாரின் சொற்படி, அவருடன் நஞ்சுண்டகண்டனைத் தரிசிப்பதற்குக் கோயிலுட் சென்றார்; சென்று, திருச்சந்நிதானத்தில் நின்றுகொண்டு "எருளும் இறைவா! உம் 'அடிகளில் இரவும் பகலும் எப்பொழுதும் பிரியாது வணங்குவேன்; என் நெஞ்சத்தை உமக்கே இடமாக வைத்தேன்; உமக்கே ஆட்செய்து வாழலுற்றால் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளலாகாதோ? வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால் என் வேதனையானவற்றை விலக்கலாகாதோ? கைலை மலையை எடுத்த இராவணனுடைய தோள்கள் பத்தும் நெறிந்தபோது அவன் வாய்விட்டு அலறவே, அவனுக்கு வாளும் வாழ்வும் கொடுத்தருளவில்லையோ? எனக்கும் அருளலாகாதோ? அடியார் படுவது இதுவேயாகில், என்னைப் போன்றவர்கள் உம்மைத் தெளியார்கள்" என்றெல்லாம் 'தமிழோ டிசைபாடல்களால் சிவபிரானுடைய அருளை வேண்டினார். உம் நாமம் என் நாவில் மறந்தறியேன்' என்று உறுதி கூறிய மருணீக்கியார், இறைவனாணையால் "திருநாவுக்கரசு" என்று பெயர் பெற்றார்; அப்பொழுதே சூலை நோயும் அவரைவிட்டு நீங்கிற்று. அன்று முதல் திருநாவுக்கரசு சுவாமிகள் 'தியானம் அறாத உணர்வும், இடையறாது திருப்பதிகங்கள் பொழியும் வாயும், திருப்பணி செய்வதற்கான உழவாரப்படை தாங்கிய கையுமாய் விளங்கினார்.

தாங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்த தருமசேனர் சிவ வேஷம் பூண்டு விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு விளங்குகிறார் என்பதைக் கேட்ட சமணர்கள் தங்களுக்கு ஆதரவு காட்டும் அரசனை அடைந்து, தருமசேனரைத் தண்டிக்க வேண்டும் என்று ஏவினார்கள். அவர்கள் சொற்படி நடக்கும் வேந்தனும் திருநாவுக்கரசு சுவாமிகளை அழைத்துவரக் கட்டளையிட்டான். தன்னை அழைக்கவந்த தூதர்களிடம், சுவாமிகள் "நாம்யார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்; ஏமாப்போம்; பிணியறியோம்; சங்கரனுக்கு நாம் என்றும் மீளா ஆளாய் அவன் சேவடியிணையே குறுகினோம்; அவனும் எம்மை என்று கொண்டான்; பிறர் யார்க்கும் பணிவோம் அல்லோம்; சிவனே என்னும் நாவுடையாரே எம்மை ஆளுடையார்," என்று கூறினார். இதைக்கேட்ட அரசனுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. சுவாமிகளைப் பிடித்து சுண்ணாம்புக் காளவாயில் இடச்செய்தான். அவ்விடம் முழுதும் சுவாமிகளுக்கு ஈசனுடைய இணையடி நிழலாக மாறவே, எங்கும் வீணைகானமும் மாலைமதியும் தென்றலும் இளவேனிலுமாய்ப் பொய்கைபோலக் குளிர்ந்திருந்தது. அரசன் அவருக்கு நஞ்சை ஊட்டச் செய்தான்; நஞ்சை அமுதாகக் கொண்டவனுடைய அடியாருக்கு நஞ்சு அமுதாவது அற்புதமோ? மதயானையை சுவாமிகள்மேல் விடச்சொன்னான் அரசன்; மலைபோல் வந்த மதயானையின் தோலை உரித்த பெருமானுடைய அடியார்கள் யானைக்கு அஞ்சுவது யாதொன்றும் இல்லை யன்றோ? மதயானையும் சுவாமிகளை வலம் வந்து தாழ்ந்து வணங்கிச் சென்றது. பிறகு அரசன் ஏவுதலின்மேல், சுவாமிகளைக் கற்றூணிலே கட்டிக் கடலிலே போட்டார்கள். கற்றூணைப் பூட்டிக் கடலிலே பாய்ச்சினாலும், நடுக்கத்தைப் போக்கும் நற்றுணையாகி நலம் மிகக் கொடுப்பது 'நமச்சிவாய' என்னும் பஞ்சாக்ஷர மந்திரம் என்று. அதனை நாவி

னிக்கு அருங்கலமாகக் கொண்டார் திருநாவுக்கரசு சுவாமிகள். அவரைக் கட்டிய தூணே அவருக்குத் தெப்பமாகிவிட்டது. கடலிலே மிதந்த கல் சுவாமிகளோடு திருப்பாதிரிப் புலியூருக் கருகிலே கரை சேர்ந்தது. அங்கிருந்து சுவாமிகள் திருவதிகைக்கு மீண்டும் வந்து சேர்ந்தார்.

“ தூய வெண்ணீறு துதைந்த
பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ்
சிந்தையும் நைந்து ருகிப்
பாய்வதுபோல் அன்பு நீர் பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயு முடையார்
புகுந்தனர் வீதியுள்ளே ”

என்று கூறி அவரைக் கண்டு எல்லோரும் ஆனந்தமடைந்தார்கள். பல்லவ அரசனும் தான் செய்த கொடுமைகளைப் பொருட்படுத்தாமல், தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்று சுவாமிகளிடம் பிரார்த்தித்தான்; அவரால் அங்கீகரிக்கப் பெற்று அப்பல்லவன் பரம சைவனாகித் தன் பெயரால் ‘குணபரேசுரம்’ என்னும் கோயிலைக் கட்டினான்.

சைவமதத்தை விட்டு விலகிச் சென்றவர்களான மருணீக்கியாரையும் குணபரன் என்னும் பல்லவ மன்னனையும் மீண்டும் சைவ மதத்தைச் சேர்ப்பித்தது திலதவதியாருடைய பக்திக்கு இரங்கி அருளும் பரமசிவனுடைய கருணை வெள்ளம்.

அக்காலத்திலே திருக்கோயில் இல்லாத திருவில்லாத ஊர் இல்லை; ஊர் தோறும் சென்று திருநாவுக்கரசு சுவாமிகள் பரமசிவனைப் பண்கொண்ட பதிகங்களால் பாடித் தொழு தெழுவார்; கோயிலை வலம் வரும் அடியார்களுக்குப் புல் பூண்டு முதலிய வற்றால் யாதொரு தீங்கும் நேரிடக் கூடாது என்று உழவாரப் படைகொண்டு அவற்றைச் செதுக்கி அப்புறப் படுத்துவார். எப்பொழுதும் சித்தத்தைச் சிவனிடமே வைத்திருப்பார். இவ்வாறு மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று காரணங்களையும் பரமனுக்கே அர்ப்பணமாக்கி விட்டார். பரமனும் இவருக்கு திருத்தூங்கானைமடத்திலே மூவிலைச்சூலத்தாலும் விருஷபத்தாலும் இலச்சினை யிட்டருளினன். திருநல்லூரிலே இவருடைய சென்னிமேல் பாத இலச்சினை யிட்டருளினன். சுவாமிகள் பரம பக்தராக இருந்தும், ‘பக்தனைப் பாடமாட்டேன், பரமனே!’ என்று தம்முடைய பக்திக் குறைவுக்கு எங்கினர்; “முதல்வா! உனக்கு அடிமை செய்வது எப்படி என்று என் சிந்தையைத் திகைப்பியாமல் சொல்ல வேண்டும்” என்று வேண்டினர். “வேதங்கள் தினையளவும் குன்றாதத் தில்லைச் சிற்றம்பலத்திலே நீ ஆடுவதைக் காணவந்தேன்” என்றார்.“அம்பலத்தாடுவான் பாதங்களைத் தம் நெஞ்சுள் இருத்திக் கொண்டார். இனி, அல்லல் என் செய்யும்? அருவினை என் செய்யும்? தொல்லை வல்வினைத் தொந்தம் தான் என் செய்யும்?” என்று தைரியங் கொண்டு, அன்பால் உருகும் நெஞ்சம், கண்ணீர் பொழியும் முகமும், பதிகச் சொல் நிறைந்த வாயும், திருப்பணி செய்யும் உழவாரந் தாங்கிய கையும் சிவசின்னங்களும், திரு நீறு துலங்கும் மெய்யுமாய் விளங்கினர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

அப்பொழுது, சீர்காழியிலேயே திருஞானசம்பந்த சுவாமிகள் தோன்றிப் பாலருவாயருகஇருக்கும் இளவயதிலேயே அம்பாளிடம் பாலமுதம் பெற்று எழுதா மறையான வேதங்களைப் பயின்ற வாய் கொண்டு வண்டமிழால் எழுதுமறை மொழிந்து க்ஷேத்திராடனம் செய்து வருவதைக் கேட்டார் திருநாவுக்கரசு சுவாமிகள்; உடனே அவரைக் காண விரும்பி எதிர்கொண்டு சென்றார். தம்மைக்காண திருநாவுக்கரசு சுவாமிகள் வருகிறார் என்பதைக் கேட்ட திருஞானசம்பந்த சுவாமிகளும் அவரை ‘அப்பரே’ என்றழைத்தார். அது முதல் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு ‘அப்பர்’ என்று பெயராயிற்று.

சைவப் பெரியார்கள் இருவருமாகச் சென்று பல ஸ்தலங்களைத் தரிசித்தார்கள்; சிவபெருமானை வணங்கிப்பல பதிகங்களைப் பாடினார்கள். பிறகு அப்பர் தனியாக சில க்ஷேத்திரங்களுக்குச் சென்றார். அன்னசாலை, தண்ணீர்ப் பந்தல், இறங்கு கிணறு, குளம் முதலிய தருமங்களை யெல்லாம் திருநாவுக்கரசு சுவாமிகளின் பெயராலேயே செய்து வந்தார் திங்களூரிலே

வசித்து வந்த அப்பூதி என்னும் ஒரு பிராமணர். அப்பர், அவரூருக்குச் சென்று அவருடைய சிவபக்தியைச் சிறப்பித்துப் பாடினர். இவ்வாறே நமிநந்தியடிகள் என்னும் திருத்தொண்டர் பெயரையும் ஒரு திருவிருத்தத்துள் வைத்துப் பாடினர். பிறகு முருகனர் என்னும் திருத்தொண்டரின் திருமடத்திலே திருஞானசம்பந்தமூர்த்திகள் எழுந்தருளி இருப்பதைக் கேட்டு, அங்கே செல்லும் போது சம்பந்த மூர்த்திகளும் அடியார்களும் இவரையும் இவரோடு கூடவந்த அடியார்களையும் வரவேற்ருர்கள். அப்பரிடமிருந்து திருவாரூரின் பெருமையைக் கேட்டறிந்த சம்பந்தமூர்த்திகள் திருவாரூரரைத் தரிசிக்கச் சென்று தரிசித்து மீண்டும் அப்பரோடு சேர்ந்து கொண்டார். இருவருமாக முருகனர் திருமடத்திலே தங்கி யிருக்கும்போது சிறுத்தொண்டர், நீலநக்கர் என்னும் அடியார்களும் இவர்களுடன் கலந்து கொண்டார்கள். இப்படி அடியார்கள் பலரும் ஒன்று சேர்ந்து சில நாள் இருந்தார்கள்.

பிறகு, சம்பந்த மூர்த்திகளும் அப்பர் சுவாமிகளும் திருக்கடவூர் சென்று, யமனை உதைத்த திருவடிகளைத் தொழுது அவ்வூரிலே வாழ்ந்த அடியாரான குங்குலியக் கலயனுயருடன் வசித்தார்கள்.

இவர்கள் க்ஷேத்திராடனம் செய்து வரும்போது பல அதிசயங்கள் நிகழ்ந்தன வீழி மிழலையிலே இவரும் சம்பந்த மூர்த்திகளும் தங்கி யிருந்தபோது கொடிய பஞ்சத்தால் மக்கள் வருந்தினர்கள். அப்பொழுது இருவருக்கும் படிக்காசு அளந்தான் சிவபெருமான். திருமறைக் காட்டிலே வேதங்கள் வணங்கிய பின் அடைத்த கதவுகள் அப்பர் சுவாமிகள் பதிகம் பாடியதும் திறந்தன; சம்பந்த மூர்த்திகள் பாடியதும் மூடிக்கொண்டன; திருவாய்மூரிலே சம்பந்த மூர்த்திகள் சுட்டிக் காட்டச் சுவாமிகள் அற்புதக் காட்சியொன்றைக் கண்டார்; "பாட அடியார் பரவக் கண்டேன்; பக்தர் கணம் கண்டேன்; பதினென் கணமும் பயிலக் கண்டேன்; அடியார் சிலம்பொலிகள் ஆர்ப்பக் கண்டேன்; விண்ணில் திகழும் முடியும் கண்டேன்; கண்ணிப் பிரியா மழுவும் கண்டேன்; நாலு மறையங்கம் ஓதக் கண்டேன்; துலங்கும் திருமார்பில் நீறு கண்டேன்; மான்மறி தம் கையில் மருவக் கண்டேன்; மூவிலை வேல் கையிற் கண்டேன்; கங்கணமும் அங்கைக் கனலும் கண்டேன்; பாலின் மொழியாள் ஓர்பாகம் கண்டேன்; குழையார் திருத்தோடு காதிற் கண்டேன்; இழையார் புரிநூல் வலத்தே கண்டேன் மழையார் திருமிடறும் மற்றும் கண்டேன்" என்று பாடினர்.

சுவாமிகள் சம்பந்த மூர்த்திகளுடன் திருமறைக் காட்டிலே இருக்கும் நாளிலே, ஒரு நாள் பாண்டிய மன்னனுடைய தேவியும் சோழ மன்னன் மகளுமான மங்கையர்க்கரசியாரும் பாண்டியன் மந்திரியான குலச்சிறையாரும் அனுப்பிய தூதர்கள் சம்பந்த மூர்த்திகளை மதுரைக்கு அழைத்துச் செல்ல வந்தார்கள். "மதுரை மன்னனை கூன்பாண்டியன் சமணமதத்திலே பற்றுடையவனும் சைவத்தை அனுதத்து வருகிறுன்; அவனை மீண்டும் சைவ நெறியிலே பற்றுடையவனுக்க வேண்டும்' என்று வேண்டினுர்கள்.

சமணர்களால் தமக்கு நேர்ந்த தீமைகளை நினைத்துக்கொண்டு அப்பர் சுவாமிகள் சம்பந்தமூர்த்திகளிடமிருந்த பிரேமையால் மதுரைக்குச் செல்லவேண்டாம் என்று அவரைத் தடுத்துப் பார்த்தார். ஆயினும் சம்பந்தமூர்த்திகள் "பரமேசுவரன் என் உள்ளத்திலே புகுந்ததனுல் ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பு ஆகிய அவை எல்லாம் அடியார்க்கு மிகவும் நல்லவையே" என்ற உறுதிகொண்டு புறப்பட்டு விட்டார். சம்பந்தமூர்த்திகளைப் பிரிந்த சுவாமிகள் ஸ்தல யாத்திரை புரிந்தார்; பழையாறையிலே சமணர் மறைத்து வைத்திருந்த சிவன் கோயிலைக் கண்டுபிடித்து அரசனைக் கொண்டு புது விமானம் கட்டி அர்ச்சனைக்கு நிபந்தம் முதலியவற்றை ஏற்படுத்தும்படி செய்தார்; ஒரு சமயம் இவர் யாத்திரை செல்லும்போது பசியால் வருந்தவே, பரமசிவனே வழிப்போக்கராக வந்து இவருக்குப் பொதி சோறு அளித்தார். காஞ்சிபுரத்திற்கு இவர் சென்ற

போது அங்குள்ள அடியார்கள் இவரை எதிர்கொண்டு வரவேற்றுக் கொண்டாடினார்கள். திருக்காளத்தி மலையிலே ஈசனோடு கண்ணப்பரையும் தொழுதபின், கயிலாயமலையை நோக்கிச் சென்றார். பாலைவனங்களிலும் காடு மேடுகளிலும் இரவும் பகலுமாகச் சென்ற சுவாமிகளுக்கு கால்களும் கைகளும் தேய்ந்துவிட்டன ; மார்பாலே உந்திச் சென்றார் ; மாரெலும்புகள் முரிந்தன ; அப்பொழுதும் சுவாமிகள் பயணந் தவிர்க்கவில்லை ; புரண்டு புரண்டு சென்றார் சிறிது தூரம்; அப்படியும் செல்ல முடியவில்லை ; அப்பொழுது அவர் முன் ஒரு பெரியார் தோன்றி "மானிடர் சென்று அடைவதற்கு எளிதோ கைலை மலை ? அதனால் நீர் மீள்வதே சரி" என்றார். அதற்கு அப்பர், "கைலையைக் கண்டல்லால் இவ்வுடல்கொண்டு மீளேன்" என்று உறுதி கூறினார். வந்த பெரியார் மறைந்தார். "நாவுக்கரசனே ! எழுந்திரு" என்றது ஆகாசவாணி. தேய்ந்த உறுப்பெல்லாம் நன்றாகிவிட்டது. எழுந்திருந்து "வேத நாயகனே ! நீ திருக்கைலையில் இருந்த கோலத்தை என் கண்ணினால் கண்டு நான் தொழ அருள் புரிவாய்" என்று வேண்டினார். "இப்பொய்கையில் மூழ்கினால், திருவையாற்றை அடைவாய் ; அங்கே கைலாச தரிசனம் ஆகும்" என்றது அசரீரி வாக்கு. அவ்வாறே அப்பர் அங்கிருந்த பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்து கைலாசக் காட்சி கண்டார். உலகத்து உயிர்கள் எல்லாம் அவர் கண்களுக்குச் சக்தியும் சிவனுமாய்த் தோற்றின. ஸப்த ஸ்தானங்களையும் சென்று தரிசித்தார் ; திருப்பூந் துருத்தியிலே திருமடம் ஒன்று ஸ்தாபித்தார் ; அங்கே பாடியதுதான் திருவங்கமாலை என்னும் பதிகம். பாண்டியனுடைய கூனை நிமிர்த்தருளி பாண்டிய நாட்டிலும் அங்கும் சைவ மதத்தை நிலைநாட்டி சோழ நாட்டிற்குத் திரும்பினார் சம்பந்தமூர்த்திகள். அப்பர் சுவாமிகள் திருப்பூந்துருத்தியிலே இருப்பதை அறிந்து அவரைக் காண விரைந்து வந்தார். சம்பந்தமூர்த்திகள் வருவதை யறிந்த அப்பர் சுவாமிகள் யாரும் தம்மைக் காணாதவாறு சென்று சம்பந்தமூர்த்திகளுடைய முத்துச் சிவிகையைத் தாங்கி நடந்தார், ஊருக்கு அருகிலே வந்ததும் சம்பந்தமூர்த்திகள் "அப்பர் எங்கே இருக்கிறார் ?" என்று கேட்டார். "இதோ, சிவிகை தாங்கும் பேறுபெற்று நிற்கிறேன்" என்று தாழ்மையுடன் கூறினார் அப்பர்சுவாமிகள். உடனே சம்பந்தமூர்த்திகள் சிவிகையினின்று இறங்கி அப்பரை வணங்கினார். பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ ?

### சந்தாதாருக்கு அறிக்கை.

சந்தாத்தொகையைச் செலுத்தாமல் பாக்கி வைத்திருப்பவர்கள், பாரத மணி ஆபீஸிலிருந்து 'ரிமைண்டர்' கடிதத்தை எதிர்பாராமல் வருஷசந்தாத் தொகை ரூ. 3—0—0யும் தாமதிக்காமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மானேஜர்.

### அறிவிப்பு

"பாரத மணி"யில் அடுத்த மலரிலிருந்து அகில இந்திய கிராம தொழில் சங்கத்தார் ஆங்கிலத்தில் வெளியிட்ட "அரிசி" என்னும் புத்தகம் ஆ. வே. ஜயராமனால் மொழிபெயர்க்கப்பட்டு தொடர்ந்து வெளிவரும்.

# தமிழில் வெளிவந்துள்ள "பௌதிக நூல்"

ஹரிஹர இராமசந்திரன், பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்.)

[இலயோலாக் கல்லூரி பௌதிக ஆசிரியர்]

ஸ்ரீ. ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., ஸ்ரீ. வி. என். இராமஸாமி, பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்) என்ற இரு ஆசிரியர்களால் எழுதப்பட்டு, மிகச் சிறந்ததென்று அண்ணாமலைச் சர்வகலா சாலையாரால் ஆயிரம் ரூபாய் பரிசும் அளிக்கப்பட்டு, சில நாட்களுக்கு முன் அவர்களாலேயே செவ்வனே பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துள்ள "பௌதிக நூல்" தமிழ் மொழிக்குத் தனிப் பெருமையை அளித்ததாகவே கருதப்படவேண்டும்.

ஏனெனில், இண்டர்மீடியட்டு வகுப்பின் பாட திட்டத்திற்கு ஏற்பத் தமிழில் வெளிவந்துள்ள நூல்கள் இதுகாறும் இல்லை. இந்த நூலே, அவ்வகுப்புக்குத் தாய்மொழியான தமிழிலேயே பௌதிகத்தைக் கற்பித்தலும் கற்பதும் கூடும் என்பதை முதன் முதலாக எடுத்துக் காட்டுகிறது.

கல்லூரி வகுப்புகளுக்குத் தமிழில் சாஸ்திர நூல்களைத் தயாரிப்பது என்பது மிகவும் பெரு முயற்சியாகும். இப் பெரு முயற்சியில், இத்தனைச் சிறப்புடன் வெற்றி பெற்ற "பௌதிக நூலி"ன் இரு ஆசிரியர்கட்கும் தமிழுலகம் எக்காலத்தும் கடமைப்பட்டதாகும்.

இதுகாறும் ஆங்கிலப் புத்தகங்களின் வாயிலாகவே கற்பிக்கப்பட்டு வந்த பௌதிக நூலைத் தமிழில் எழுத முயலுபவர், பௌதிக சாஸ்திரத்தில் ஆழ்ந்த அறிவினராய் இருப்பதுடன், தமிழிலும், சிறந்த பயிற்சி பெற்றவராயும் இருத்தல் வேண்டும். இவை இரண்டும் ஒருங்கே அமையப்பெற்ற ஸ்ரீ. ஆர். கே. விசுவநாதன் அவர்களும் ஸ்ரீ. வி. என். இராமஸாமி அவர்களும், இத்தகைய நூலை வெளியிட்டனர் என்பது, அவர்களின் முன் வெளியீடுகளை அறிந்தவர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கமாட்டா.

பௌதிக சாஸ்திரத்தில் பிரயோகிக்கப்படும், உரிமைச் சொற்களுக்கு, இவ்வாசிரியர்கள், இவ்வளவு நேர்மையுடன் தமிழ்ச் சொற்கள் அமைத்தது மிகவும் வியக்கற்பாலது. "அக்ஸெலரேஷன்" (Acceleration) என்ற பதத்திற்கு "முடுக்கம்" என்னும் நேர்ப்பதமும், "பாயிலிங் பாயிண்டு" (Boiling point) என்பதற்குக் "கொதிநிலை" என்னும் பதமும் எவ்வளவு பொருத்தமாய் இருக்கின்றன!

மேற்கூறியது போலவே, ஒவ்வொரு பதமும் பொருத்தம் நோக்கியும், உணர்த்த வேண்டிய கருத்தை நோக்கியும், மிகச் சிறப்பாய் அமைக்கப்பட் டிருக்கின்றன. பௌதிக மறியாத தமிழ்ப் பண்டிதர்களும், ஆங்கிலத்திலல்லது பௌதிக மறியமாட்டாத சில பௌதிக நிபுணர்களும், இப்புத்தகத்தில் வந்துள்ள சொற்களில் சிலவற்றுக்கு வேறு சொற்கள் கூறுதலோ அல்லது அவை தொல்காப்பிய விதிகளுக்கு மாறானவை என்று கூறுதலோ அல்லது அவை மிகப் புதியனவாய் இருக்கின்றன என்று கூறுதலோ கூடும். ஆனால் இவ்வாறு குறைகூறும் உரிமை இவர்களுக்கு இல்லை. ஏனெனில் பௌதிக சாஸ்திரம் கல்லாத பண்டிதர்களும் தமிழறியாத பௌதிக நிபுணர்களும் தமிழில் வந்துள்ள "பௌதிக நூலை" எவ்வாறு சீர்தூக்கும் உரிமையைப் பெற்றவராவார்கள்? ஆகவே இவர்கள் எஞ்சிய பிறரே, இந்நூலின் தனி மதிப்பைக் காண வல்லுனராவர்.

தொடக்கத்திலிருந்தே தமிழில் சாஸ்திரம் பயிலும் மாணவர்களுக்கு இந்நூல், ஆங்கிலப் புத்தகங்களிலிருந்து பெறக்கூடிய "சாஸ்திர உணர்ச்சி"யைக் காட்டிலும், மிகையாகவே பௌதிகத்தைக் கற்பிக்கும் என்று திடமாய்க் கூற இடமிருக்கிறது.

## தமிழில் வெளிவந்துள்ள "பௌதிக நூல்"

ஒரு சிலருக்கு, பௌதிக நூலின் முதற் புத்தகமாகிய இந்நூல், 686 பக்கங்கள் வளர்ந்திருப்பது ஒரு குறையாய்த் தோன்றலாம். "தமிழில் சுருக்கமாய் பௌதிகம் கற்பித்தல் முடியாததோ?" என்று அவர்கள் சந்தேகிக்கலாம். அவர்கள், புத்தகம் பதிப்பிக்கப் பெற்றுள்ள முறையை அறியாதவரே யாவர். நல்ல பெரிய எழுத்தில், வேண்டு மிடங்களில் இடம் விட்டு எண்ணிறந்த விளக்கப் படங்களை அமைத்து, சீரான முறையில் கணக்குகளை விளக்கிக் காட்டியதாலே தான், இப்புத்தகம் விரிவடைந்ததே யன்றி, தமிழில் சுருக்கமாய்ப் பௌதிகம் கற்பிக்க முடியாததால், இப்புத்தகம் வளரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்தில் ஒரு பௌதிக நிகழ்ச்சியை விளக்குவதற்கு எத்தனைச் சொற்கள் வேண்டுமோ, அவைகளில் பாதிக்குள்ளாகவே, தமிழில் அந் நிகழ்ச்சி செவ்வனே விளக்கம் பெற்றிருப்பது, புத்தகத்தைக் கூர்ந்து படித்தவருக்கு எளிதில் விளங்குவதாகும்.

நாற்பது வயதாகியும் பிள்ளைப் பேறு வாய்க்காத ஒருத்தி, அதன் பின் தனக்கு வாய்த்த ஊமைப் பிள்ளையை "என் கண்ணே! காளிதாஸா!" என்று கூறி அகமகிழும் வழக்கம் உண்டு. அவ்வழக்கிற் கேற்ப, இதுகாறும் தமிழில் பௌதிகநூல் அமையாமையை நோக்கித் தமிழுலகம், இப்புத்தகத்தை "முதற் புத்தகமே! அரிய புத்தகமே!" என்று அழைப்பது வேண்டுவ தில்லை.

இனிமேல் தமிழில் வெளிவரக் கூடிய பௌதிக நூல்கள் எத்தனை யாயினும் சரி, இவ் விருவாசிரியர்களால் எழுதப் பட்ட இப்புத்தகம், முதல் அணியிலேயே சிறப்புடன் நிற்க வல்லது என்பது திண்ணம். தமிழன்னைக்கு இவ்வாசிரியர்கள், பல ஆண்டுகள் வருந்தி முயன்று பெற்றுக் கொடுத்த பிள்ளை காளிதாஸனே என்பதிற் கையமில்லை


## இன்ஷ்யூர் செய்து தேசப் பணத்தைப் பெருக்குங்கள்

ஒரு தேசத்தின் பலத்துக்கு அத்தாட்சி அத்தேசத்திலுள்ள மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளும் சக்தியுடையவர்களாய் இருப்பதுதான்.

இந்த உலகக் கலவர காலத்தில் ஒவ்வொரு இன்ஷ்யூரென்ஸ் பாலிஸி ஹோல்டரும், தான் எவ்வளவு அளவுக்குத் தன்னை வரப் போகும் இக்கட்டுகளிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை உணரவேண்டும்.

அப்படி இன்ஷ்யூர் செய்து தன்னைக் காத்துக்கொள்ளாதவர்கள் காலதாமதமின்றி இன்ஷ்யூர் செய்து தேசத்தின் செல்வப் பெருக்கை அதிகரிக்கவேண்டும்.

இன்றே விவரங்களுக்கு எழுதுங்கள் :—

**நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்**

(தலைமை ஆபீஸ் :—கல்கத்தா) (ஸ்தாபிதம் 1906)

பிராஞ்சு ஆபீஸ்: **நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்,**

362, சைனு பஜார் ரோடு, எஸ்பிளனேட், மதருஸ்.

ஸப் ஆபீஸ்கள் : 171, புதுத் தெரு, மதுரை. 5, கெம்பகோடா ரோட், பெங்களூர்

# * பசு வளர்த்தல்

[சௌதரி முக்தர் ஸிங்]

விவசாயிகளுக்கு குடிசைத் தொழிலால் உண்டாகும் நன்மையைப்பற்றி மிகுதியாகச் சொல்லியும் ஆய்விட்டது. எழுதியும் ஆய்விட்டது. மகாத்மா காந்தியும், அவரைப் பின்பற்றுகிறவர்களும், கதர் நெய்தல், எண்ணெய் எடுத்தல், காகிதம் உற்பத்தி செய்தல், முதலிய குடிசைத் தொழிலுக்கு முக்யத்வம் கொடுத்திருக்கிறார்கள் என்பது முற்றிலும் நியாயமே. ஆனால் இது போன்ற புது வியவசாயிகளுக்கு உதவி புரியவேண்டும் என்கிற நோக்கத்துடன் புதிய வழிகள் தேடும் ஆர்வத்தில் நமது பெரியோர்கள் குடிசைத் தொழிலில் முக்கியமானதாகவுள்ள பால், நெய் உற்பத்தி செய்யும் தொழிலுக்குத் தக்க ஸ்தானம் அளிக்காமல் போய்விடுவார்களோ என்று அஞ்சுகிறேன். வியவசாயிகளுக்குக் கறவை மாடுகள்தான் முக்கியம். அவற்றிலிருந்து அவர்கள் அதிக லாபத்தைப் பெறுகின்றனர். நெய்யைக் காய்ச்சி விற்பதில் வியவசாயி, தன்மிகச்சிறிய வருமானத்தைச் சிறிது பெருக்கிக்கொள்ளுகிறான். மாட்டுச் சாணிகள் வயல்களுக்கு சிறந்த எருவாகின்றன. மாடுகள், பாரம் இழுப்பதற்கும் உபயோகப்படுகின்றன. சுருங்கச் சொல்லப்போனால்,மாடுகள் இல்லாதவியவசாயி, முற்றிலும் க்ஷீணமடைகிறான். இவ்வளவு முக்கியமான ஓர் தொழிலைப் பற்றி ஒருவரும் சிரத்தை எடுத்துக் கொள்ளாமல் இருப்பது கேவலம் துரதிர்ஷ்டந்தான்.

நமது கிராமவாசிகளின் இவ்வளவு இழிவான நிலைமைக்குக் காரணம் நமது பொது மக்கள், இத் தொழிலைப்பற்றி, கிராமவாசிகளுக்குப் பிரசாரம் செய்யாமலிருப்பதுதான். இத்தொழில் நடத்துவதில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை வியவசாயிகள் உணர வேண்டும்.

பசுவளர்த்தல் தொழிலில் ஓர் முக்கிய கஷ்டம் என்னவென்றால், இத்தொழில் பூர்ணமான பிரதி பலனை அளிப்பதில்லை. பொருளாதார சாஸ்திர முறைப்படி எந்தத் தொழில் லாபம் தரக்கூடாததோ அந்தத் தொழிலைப் பொதுமக்கள் அனுஷ்டிக்க மாட்டார்கள். பசுக்களைக் காட்டிலும், எருமை மாடுகளின் நிலைமை சற்று திருப்திகரமாகவே இருக்கிறது. ஆனால் எருமைக் கிடாக்கள், எருதுகள் அவ்வளவு சுறுசுறுப்புடையனவல்ல. இந்த ஒரு துர்க்குணம்மாத்திரம் எருமைமாடுகளிடம் இல்லாவிட்டால், அவை ஒவ்வொரு வியவசாயி வீட்டிலும் ஏராளமாகக் காணப்படும். பசுமாடுகளையே காண்பது துர்லபமாகி விடும்.

"கால்நடைகளை உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவையாகச் செய்யுங்கள்; அதுதான் கால்நடை அபிவிருத்தியை யடைய ஓர் சிறந்த வழி" என்று பலர் கூறுகிறார்கள். இது சம்பந்தமாகப் பொதுமக்களும், சர்க்காரும் கையாளும் ஓர் அர்த்தமற்ற கொள்கையைக் கவனிக்கும்போது கால்நடை அபிவிருத்திக்கு இடமே இல்லை என்றுதான் தோன்றுகிறது. பட்டணத்து வாசிகள், கிராமங்களிலிருக்கும் சிறந்த கறவை மாடுகளை ஏராளமான பணத்தைக்கொட்டி வாங்கிக்கொண்டு போகிறார்கள். நகரத்தில் அந்தக் கறவை மாடுகள் பால் கொடுக்கிறவரையில் வளர்க்கிறார்கள். பால் மறந்தவுடன் அம்மாடுகளை முக்கால்வாசிப் பேர்கள் கசாப்புக்காரனுக்கும் விற்றுவிடுகிறார்கள். இந்த அநியாயத்தை நிறுத்துகிற வரையில், கால்நடை அபிவிருத்தி என்கிற பேச்சு, வீண் பொழுதுபோக்குப் பேச்சுதான். சர்க்கார் இதுவிஷயமாகச் சிரத்தை எடுத்துக் கொள்வார்களா?

கிராமத்திலுள்ள கறவை மாடுகள் மேற்கண்ட விதமாக நகரங்களுக்குச் சென்று, பிறகு கசாப்புக் காரனிடம் செல்வதைப்

* "ரூரல் இந்தியா" விலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.


பொதுமக்கள் ஓர்தீவிரமான இயக்கத்தால் நிறுத்தவேண்டும். கிராமங்களிலிருந்து இப்பொழுது நடந்துவருவதைப்போல் ஏராளமான கறவை மாடுகள் நகரங்களுக்கு ஏற்றுமதியாவதை அடியோடு நிறுத்த வேண்டும்.

பசுவளர்த்தல் குடிசைத் தொழிலாக முன்னேற்றமடைய மற்றொரு கஷ்டமும் இருக்கிறது. சிறிதும் தாக்ஷிண்யமின்றி விற்பனையாளர்கள், பாலிலும், நெய்யிலும், கலப்புச்சேர்ப்பதுஇத்தொழிலை அடியோடு தொலைத்துவிடக் கூடியதாக இருக்கிறது. சர்க்கார் நிபுணர்களே, இதுபோன்ற கலப்பு வியாபாரங்கள் வெகுவாக நடந்து வருகின்றன என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்படி உயர்ந்த சரக்குகளைக் கலப்புச் சேர்த்து விற்கிற பழக்கம் இருக்கிற வரையில், ஒரு ஸத்தியவாதியும், பசு வளர்த்தல் தொழிலைக் கையாளமுடியாது, என்பதையும் அதே சர்க்கார் நிபுணர்கள் உணர்கிறார்கள். ஆனால் வைஸ்ராய் இது சம்பந்தமாக ஒரு சட்டமும் கொண்டு வரவில்லை. காங்கிரஸ் சர்க்கார்களும், இது சம்பந்தப்பட்ட வரையில் கையைக் கட்டிக் கொண்டுதான் உட்கார்ந்திருந்தனர். சர்க்காரைச் சொல்லி என்ன பயன்? “பொது மக்களின் தர்மகர்த்தாக்கள்” என்ற பெயருடன் தீவிரமாக எழுதும் பத்திரிகைகள் கூட கலப்புச்சேர்த்து வியாபாரம் செய்கிறவர்களிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு அவர்கள் சாக்கிற்கு புகழ்மாலை சூட்டுகின்றன. “ஹைட்ரோஜனேடட்” என்ணெயை வெண்ணெயில் கலந்துவிற்பதையும் பாலில் நீர்கலந்து விற்பதையும் ஒரு தேசமும் அனுமதிக்கவில்லை. இந்த ஒரு துர்ப்பாக்கிய தேசத்தில்தான் அப்பழக்கங்கள் தங்கு தடையின்றி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

காங்கிரஸ் ஊழியர்கள் தங்கள் ஞாபகத்தை இதில் திருப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் பிரசாரம் செய்யும் கதர்த்திட்டம் மிகவும் நல்லதுதான். போதிய பிரதிபலனை அளிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கதர் உற்பத்தித் தொழில், நெய் வெண்ணெய், உற்பத்தி செய்யும் குடிசைத் தொழிலுக்குச் சமமாக ஒருநாளும் ஆகாது என்பது என் கருத்து.

நமது தேசத்தில் தேங்கிநிற்கும் பொருளாதார நோய்களைத் தீர்க்க இந்தப் பசு வளர்த்தல் தொழிலை விருத்தி செய்வது தான் ஓர் சிறந்தவழி. காந்திஜியும், காங்கிரஸ் ஸ்தாபனங்களும் இத்தொழில் முன்னேற்றத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுவதவசியம். நமது கால்நடைச் செல்வத்தை அழியாமல் காப்பாற்றத்தக்க பிரயத்னங்களை எடுத்துக் கொள்ள வேண்டுவது நமது கடமை.

# போகிற போக்கில்



யுத்தத்தைப்பற்றி நான் எழுதி எழுதி அலுத்துப்போயிருக்கிறேன். 'போகிற போகிலில்' நான் எழுத எழுதக் காற்ருல் தூண்டப்பட்டக் காட்டுத் தியைப்போல யுத்தம் பரவி வருகிறது—எரியும் ஜ்வாலையில் நெய்யை ஆஹுதி செய்வதுபோல். பிரிட்டன் அமெரிக்கா என்ற இரண்டு நாடுகளின்மீதும் ஜப்பான் மின்னல்யுத்தம் தொடுத்துவிட்டது.

ஆகையால் நான் இரண்டு வருஷங்களுக்குமுன் 'போகிறபோக்கில்' சொன்ன ஜோஸ்யம் பலித்துவிட்டது. மூன்று வருஷங்களுக்கு முன் பிரிட்டன் ரஷ்யாவின் நட்பை இழந்து வெளிநாட்டுக் காரியதரிசியான லிட்வினுப் போய், மாலடாவ் வந்தவுடன் அது உலக யுத்தத்திற்கு ஆரம்பமென்று கூறியிருந்தேன். அது இப்பொழுது பூர்த்தியாகிவிட்டது. ஆகையால் இனிமேல் 'போகிற போக்கிலி'ல் கொஞ்சகாலம் யுத்தத்தைப்பற்றி எழுதாமலிருப்பது உலகத்திற்கே க்ஷேமமென்று கருதுகிறேன்.

* * *

வருஷத்திற்கு இருமுறை என் குறைகளையும், 'பாரதமணி'யின் குறைகளையும் கூறி, வெளியிட்டுப் புலம்பலாமென்று ஏற்கனவே கண்பர்களிடம் நான் உத்திரவு பெற்றிருக்கிறேன். அதை மறுபடியும் இப்பொழுது உபயோகப்படுத்த இதுதான் தக்க சமயம். அடுத்த மாதம் பொங்கல் பண்டிகை யாகையால் அப்பொழுது குறைகளைப்பற்றிச் சொல்வது அச்சாண்யமாயிருக்கும். யுத்த காலத்திலும் சுப காரியங்களை மறக்கக்கூடாதல்லவா! நமது சர்க்கார்கூட கார்த்திகைக்குத்தீபம் போடலாம், 'பிளாக் ஔட்' வேண்டாம் என்று அனுமதி கொடுக்கவில்லையா?

* * *

பாரதமணியை மாதப் பத்திரிகையாய்த் தொடங்கி இந்த மாதத்தோடு ஒருவருஷம் முடிவடைகிறது. வாரப் பத்திரிகையாய் நடந்தபொழுதிருந்த அல்லோல கல்லோலமும், அவசரத்தில் அள்ளித் தெளிப்பதும் இப்பொழுதில்லை. யுத்தம் செய்யத் தெரியாத சைன்யம், முதல் முதல் சண்டை ஆரம்பிக்கும்பொழுது எப்படியிருக்குமோ அப்படியே, முதலிரண்டு வருஷங்களும் பாரதமணி வாரப் பத்திரிகை நடந்து வந்தது. சிரமமிருந்தாலும் ஆங்கிலேயர்போல் நானும் தொட்ட காரியத்தைக் கைவிடவில்லை. கட்டிப் புரண்டு காரியத்தை நடத்திவருகிறேன். ஒரு பவுண்ட் காகிதம் இரண்டு அணுவிலிருந்து எட்டு அணு ஆனாலும்!

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிற இந்தியப் பழமொழியை அனுஸரித்து வாரப் பத்திரிகையை மாதப் பத்திரிகையாக மாற்றினேன். மூச்சுவிட அவகாசமும் ஏற்பட்டது. இந்த அவகாசமேற்பட்டும், நான் எண்ணியபடி 'மூக்கு, நாக்கு' வைத்து ஒவ்வொரு 'பாரத மணி' மலரையும் உயிருள்ள, வடிவமுள்ள மழலைச் சொல் உள்ள குழந்தையாகச் செய்ய இதுவரையில் எனக்குச் செயலில்லை. அதற்குக் காரணங்கள் பல. முதற்காரணம் ஆசிரியருக்குத் தபஸ் குறைவு. இரண்டாவது காரணம், ஆசிரியர் பிறந்த நாட்டின் அடிமைத்தனம். மூன்றாவது காரணம், தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் ருசியின் பேதம்.—இலக்கிய ருசியை மேலிட்டு நிற்கும் வியாபார ருசி. கம்பன் ருசியை மேலோங்கி நிற்கும் 'கவர் பேஜ்' காட்சி.

இவ்வகையான குறைகளெல்லாம் சொல்லால் சீர்திருத்தமாகாது. விடா முயற்சியுடன் செய்யும் செயலால்தான் சீர்திருத்தமாகவேண்டும். மந்திரத்தில் மாங்காயே விழாது; அப்படியிருக்க மந்திரத்தால் அளர் பூமி மாந்தோட்டமாகிவிடுமா? வெட்டிக் கொத்தி விதையிட்டு, ஏத்தச் சால் பிடித்து நீரிறைத்தால்தான் தோட்டம் உண்டாகும். உயர்தரப் பயன் கொடுக்கும். விருக்ஷங்களைத் தோட்டத்தில் வளர்ப்பது நோக்கமானல், பாடும், கவலையும் இன்னும் அதிகமாகும். பயன்தரவோ பொறுமையுடன் காக்க வேண்டும்.

* * *

நான் ஆசிரியர் வேலை ஏற்றுக் கொண்டபொழுதே எனக்கு நான் தயார் செய்து கொண்டது, கடையாணியில்லாத ஓர் ரேக்லா வண்டி தான். அதுவும் என் பாக்கியம்! ஆனல் கொஞ்சம் திகைத்து நின்றேன். குச்சியைச்சீவிக் கடையாணியாகப் போட்டும் பார்த்தேன். கொஞ்சதூரம் ஓடியதும் குச்சி முறிந்துபோய் விட்டது! மறுபடியும் திகைத்து நின்றேன்; கடவுளைப் பிரார்த்தித்தேன்; அவர் அருள் புரிந்தார். "அச்சு இருந்தால்தானே கடையாணி வேண்டும்?" உடனே எனக்கு உண்மை விளங்க, அச்சையும் சக்கரத்தையும் பக்கத்து வாய்க்காலில் உருட்டிவிட்டு, நொண்டிக் குதிரைக்கும் லீவு கொடுத்துவிட்டு என் கையாலேயே வண்டியைப் பிடித்திழுத்து பன்னிரண்டு மைல் தூரம் இந்தப் பாரத மணி ரேக்லாவைக்கொண்டுவந்து சேர்த்து விட்டேன். டிக்கட் வாங்கினவர்கள், டிக்கட் வாங்காதவர்கள் எல்லோரையும் சேர்த்தழைத்து உல்லாஸமாய் ஒரு வருஷ கிரிப்பிரதக்ஷணம் முடித்து விட்டேன்; வண்டி, ரேக்லா தானே—டிக்கட்டுக் கண்டிப்பாய்க் கேட்டால் ரேக்லா 'பேபார்ஸ்' என்று சொல்லுவார்களோ என்றும் பயம்!

ஆனல் எவ்வளவு காலந்தான் பாரத மணியைக் கடையாணி, அச்சு, சக்கரம் இல்லாத கை வண்டியாக இழுத்துச் செல்கிறது? அதை ரிக்ஷாவாகவாவது 1942-ஆம் வருஷத்தில் செய்யவேண்டுமென்கிற அவா என் மனத்தில் குடி கொண்டு நிற்கிறது. இதைப் பாரத மணியின் நண்பர்கள் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மணி.

# விலையென்னும் விஷப்பூச்சி

(கா. சி. வேங்கடரமணி)

சுமார் இருபது வருஷங்களுக்கு முன் "மணல் முட்டுகள்" என்ற சிந்தனைக் கீதங்களை, நான் எழுதி வந்த சமயத்தில் பல காரணங்களால் வெகு ஏக்கத்தோடு இருந்தேன். நவீன நாகரீகத்தின் முறைகளில் ஒருவிதமான சந்தோஷமும் சமாதானமும் எனக்குக் கிடைக்கவில்லை. எதைத் தொட்டாலும் ஏமாற்றம் தான். இதற்குக் காரணம் என்ன வென்ற சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தேன்.

நவீன நாகரீகத்தின் சாந்தமற்ற வாழ்விற்குக் காரண மென்ன? அந்த வாழ்வின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் விஷப்பூச்சி எது? அதைத் தேடிப் பிடிக்க வேண்டாமா?

விலையும் பொருள்களுக்கு விலையிட்டு விலைபேசி விளம்பரம் செய்து லாபத்திற்கு விற்பதுதான் என்று தீர்மானத்திற்கு வந்தேன். வியாபாரத்திற்கும் லாபத்திற்கும் என்று ஏற்படும் விலை என்பதுதான் நமது நாகரீகத்தை அழிக்கும் விஷப் பூச்சி; மரத்தை வேரோடு அழிக்கும் கரையான் பூச்சி.

பள்ளம் கண்ட இடம் லாபத்தை எதிர்பாராமல் மழைநீர் துளிகள் குதித்து ஓடுவது போல், தேவையுள்ள இடங்களுக்குப் பொருள்கள் தானாகவே போகவேண்டாமா? வியாபார விலை யென்ற பாசக் கயிற்றைக் கட்டியா பொருளை இழுக்கிறது? இந்தச் சிந்தனையில் பல வருஷங்களாய்ச் சமாதான மில்லாமல் ஆழ்ந்து நிற்கிறேன்.

அதுவும் கல்விப் பொருள்களுக்கும் புஸ்தகங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் விலைபோட்டு விற்கும் கல்வி என்ன கல்வி? விலை யென்னும் பதமே உண்மையில் மேன்மைக்கு விஷப்பூச்சியாகும்.

ஒன்றுக்குமே விலைகூறாமல் ஆவலுடன் கேட்பவர்களுக்குக் கொடுத்து அவர்கள் மனமொப்பி சௌகரியம் போல் கொடுக்கும் பிக்ஷையை வாங்கிப் பிரும்மசாரி போல் தொண்டு புரியும் தொண்டல்லவோ பரிசுத்தமான தொண்டு.

வியாபார விலைகூறி நமது நாட்டை வளர்க்காமல், அன்பால் நாம் எப்பொழுது வளர்க்கப் போகிறோம்?

# ஸ்வேதாரண்ய ஆசிரம பால பாடம்

கா. சி. வேங்கடரமணி.

பாடம்—13

| | | |
|---|---|---|
| ரோஜா | தும்பை | சம்பங்கி |
| மல்லிகை | செம்பருத்தி | முல்லை |
| மனோரஞ்சிதம் | அரளி | சங்கு |

சென்ற பாடத்தில் மரங்களில் பூக்கும் பூக்களைப் பற்றிப் படித்தோம். இந்தப் பாடத்தில் செடி கொடிகளில் பூக்கும் பூக்களைப் பற்றிக் கூறுவோம்.

பூக்களில் மிகவும் அழகானது ரோஜாப்பூவே. மற்றப் பூச்செடிகளுக்கும் ரோஜாச் செடிக்கும் ஒரு வேறுபாடு உண்டு. அது என்னவென்று உன்னால் சொல்ல முடியுமா?

ரோஜாச் செடிக்குக் கூர்மையான முள் உண்டு. செடி கொடிகளுக்குச் சிருட்டியில் முட்களினால் ஏற்படும் பயன் என்ன? மாடுகளுக்கு கொம்புகள் போலவும் பூனைக்கு நகங்கள் போலவும் செடிகளுக்கு முட்கள் பயன்படுகிறது.

மணி, நீ பார்த்த பூக்களுக்குள் எந்தப் பூவிலுள்ள வாசனையும், அழகும், வடிவமும் உனக்கு பிடித்தமாயிருக்கிறது?

பூக்களின் முக்கியத்தன்மை வாசனையா, அழகா? வாசனையும் அழகும் ஒரு பூவில் சேர்ந்தால், அது தங்கத்தில் பதித்த இரத்தினத்தைப்போல் சோபிக்கும்.

என் அபிப்பிராயத்தில் அழகைவிட வாசனையே மேன்மையானது. எப்படி, மானிட வாழ்வில் அழகைவிட குணமே மேன்மையாகக் கருதப்படுகிறதோ அப்படித்தான்.

உனக்கு இது தெரியுமா, மணி? காலையில் மலர்ந்து ஒரு நிமிஷத்தில் வாடிப்போகும் பூக்கள்கூட ஒரு துளி தேனைச் சேகரித்துக் கொடுக்கிறதல்லவா? அவ்விதமே நீயும் உன் வாழ்நாளில் நாள்தோறும் ஒரு சொட்டுத் தேன்போலொத்த தொண்டை பிறருக்குச் செய்யவேண்டும்.




# யார் உத்தமன்?

(என். சுப்பிரமணியம், பி.ஏ., எல்.டி.)

பல வருஷங்களுக்கு முன் விந்திய மலையின் சாரலில் உள்ள குகையொன்றில் சம்பரர் என்னும் முனிவர் ஒருவர் வசித்து வந்தார். அவரைத் தரிசிப்பதற்காக பல ஊர்களிலிருந்தும் பெரியோர்கள் வருவது வழக்கம். ஒரு நாள் அவரைப் பார்ப்பதற்கு சாஸ்திர நிபுணர் ஒருவர் வந்தார். இவர் சம்பரரைப் பார்த்து, "சுவாமி! நான் மோக்ஷமடைவதற்கு எந்த மார்க்கத்தை அனுசரிக்க வேண்டும்? தயை செய்து தாங்கள் கூற வேண்டும்" என்று கேட்டார்.

சம்பரரும் "முழுமனத்துடன் பகவானைத் தொழவேண்டும். அவருடைய சிருஷ்டிகளிடம் அன்பாக இருக்க வேண்டும். ஆபத்திலுள்ளோரிடம் அன்போடு இருத்தல் வேண்டும்." இதுவே வேத வாக்கியத்தின் கருத்து' என்றார், சட்டஞானி யென்பவர்; இப்படியே நீங்களும் இருந்து வாருங்கள்; இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று இருக்கலாம்" என்று சம்பரர் பதில் சொன்னார்.

"ஆபத்திலுள்ளவர் யார்?" என்று கேட்டார் சாஸ்திர நிபுணர்.

"இக் காட்டின் வழியே ஒரு நாள் ஒரு ஏழை சென்று கொண்டிருந்தான். ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் அவனைச் சில திருடர்கள் வழி மறித்து அவனிடமுள்ள சிறிய பொருளையும் அபகரித்துக் கொண்டு அவனைக் காயப்படுத்தி, முண்டமாகத் தவிக்க விட்டுச் சென்றனர். திருடர்கள் சென்ற பின்பு யதேச்சையாக இவன் படுத்திருந்த சாலையின் வழியே ஒரு ஆசார சீலர் வந்தார். அவனைத் தூரத்திலேயே கண்டு, மிலேச்சன் எனக் கருதி, உதவி யொன்றும் செய்யாமல் தூர விலகி வேகமாகப் போனார்.

கொஞ்ச நேரங் கழித்து பணக்காரன் ஒருவன் அவ்வழியே குதிரை மீது வந்து கொண்டிருந்தான். அந்த ஏழையை நெருங்கிச், சிறிது நேரம் அவனைப் பார்த்துவிட்டு, வேகமாகக் குதிரையை ஓட்டிக் கொண்டு போய்விட்டான்.

தனவந்தன் சென்றவுடன், இந்தக் காட்டிலேயே வசித்து வரும் வேடன் ஒருவன் அவ் வேழை படும் அவஸ்தையைக் கண்டு, மனமிளகி 'ஐயோ! இப்படியும் ஒருவரைத் தவிக்கவிட்டுச் சென்ற பாதகன் எவனோ? கடவுளே! இவனுக்கு உயிர்ப் பிச்சை யளிக்க வேண்டும்' என்று பிரார்த்தித்து அவனை அணுகி, மெதுவாக எடுத்துத் தன் தோள் மேல் போட்டுக் கொண்டு, கொஞ்ச தூரத்திலுள்ள தன் குடிசைக்குத் தூக்கிக் கொண்டு

போனான். அங்கு அவனைப் படுக்க வைத்து புண்களுக்கு எண்ணெய் தடவினான். உடனே உடுக்கத் துணி கொடுத்து ஆகாரமும் கொடுத்தான். அவ் வேடன் செய்த உதவியாலும் ஆண்டவன் அருளினாலும் நன்றாகத் தூங்கியபின் மறுநாள் காலையில் ஏழையின் துன்பம் நீங்கிற்று" என்று கதை யொன்றைக் கூறி, "இம்மூவரில் யார் அந்த ஏழையை ஆபத்தில் காப்பாற்றினார்?" என்று கேட்டார்.

"வேடனே காப்பாற்றினான். அவனே உத்தமன்" என்றார் சாஸ்திர நிபுணரும்.

அப்படியானால், நீங்களும் அவன் மாதிரி செய்தால் மோக்ஷம் பெறலாம்" என்று பதிலளித்துச் சம்பரர் நிஷ்டையில் ஆழ்ந்தார்.

---

# தயாளனின் தந்திரம்

சிவன்

ஓர் ஊரில் செல்வமுள்ள ஒரு ஜமீன்தார் வசித்துவந்தார். அவர் பெரிய சோம்பேறியாக இருந்தார். அவருடைய சோம்பலின் காரணத்தால் அவருடைய செல்வம் வரவர அழிந்துகொண்டேவந்தது. பிறகு அவர் கடன் வாங்க ஆரம்பித்தார். கடைசியில் ஜமீன்தார் ஒரு கடன்காரனாக ஆகிவிட்டார். அவருடைய நண்பர்கள் அவருக்கு மிகவும் உதவி செய்தார்கள். ஆனால் கொஞ்சமும் லாபம் உண்டாகவில்லை. அவர்களுள் மிகவும் புத்திசாலி ஒருவன் இருந்தான். அவன் பெயர் தயாளன். "ஜமீன்தாரின் சோம்பலை விலக்குவதுதான் அவரைச் சீர்திருத்துவதற்கான சிறந்த வழி" என்று தயாளன் எண்ணினான். உடனே அவன் ஜமீன்தாரிடம் வந்தான்.

ஜமீன்தாரைப்பார்த்து "நண்பா! உன்னுடைய இந்த நிலைமையைப் பார்க்க எனக்கு மிகவும் வருத்தமாய் இருக்கிறது. நீ நான் சொல்லுகிறபடி செய்தால் உனது துன்பம் விரைவில் விலகிவிடும்," என்று தயாளன் சொன்னான்.

ஜமீன்தார் அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்து "சகோதரா, நீ எப்படிச் சொல்லுகிறாயோ அப்படியே நடக்கிறேன்" என்றார்.


உடனே தயாளன் "தற்காலம் காலையில் எல்லோரும் விழிப்பதற்கு முன்னமே இங்கு ஓர் அன்னப் பறவை வருகிறது. நீ அதை ஒரு முறையானாலும் பார்ப்பாயானால் உனது எல்லாத் துன்பங்களும் விலகிவிடும்" என்று சொன்னான்.

மறுநாள் காலையில் ஜமீன்தார் எழுந்து வெளியே போய்க்கொண்டிருக்கும்பொழுது ஒரு வேலையாள் தன்னுடைய களஞ்சியத்திலிருந்து ஒரு தானிய மூட்டையைத் திருடி எடுத்துப் போய்க்கொண்டிருந்தான். ஜமீன்தார் அவனை நன்றாகக் கண்டித்தார். பிறகு அங்கேயிருந்து மேலே செல்ல இடையன் தன்னுடைய மாட்டின் பாலைக் கறந்து திருட்டுத்தனமாகத் தன்னுடைய மனிதனிடம் கொடுப்பதைப் பார்த்

தார். அவனையும் நன்றாகத் தண்டித்தார். பிறகு ஜமீன்தார் தன் வயலுக்கு வந்தார். நேரம் அதிகமாகிவிட்டது. இன்னும் வேலையாட்கள் வேலை செய்ய வரவில்லை என்பதைக் கண்டார். அப்பொழுதுதான் ஜமீன்தாருக்கு "இந்த எல்லா அழிவுக்கும் காரணம் தன்னுடைய சோம்பலைத் தவிர வேறொன்றுமில்லை" என்பது தெரிந்தது. அதுமுதல் ஜமீன்தார் காலை 5-மணிக்கு முன்பே எழுந்து தன்னுடைய காரியங்களைச் சரிவர பார்க்கத் தொடங்கினார்.

கொஞ்சங் கொஞ்சமாக அவருடைய எல்லாக் கடன்களும் தீர்ந்துவிட்டன. மேலும் பணக்காரனாகிவிட்டார். அப்பொழுது அவருடைய சினேகிதனாகிய தயாளன் அவரிடம் வந்தான். ஜமீன்தார் அவனை வரவேற்று "நண்பா, நீ மிகவும் சாமர்த்தியசாலி" எனப் புகழ்ந்து கூறி அவனுக்கு மிகுந்த வெகுமதி கொடுத்து அவனைத் தன் ஆருயிர் நண்பனாக அமைத்துக் கொண்டார்.



# கோலமும் அன்பும்

(பேரன்)

சிறு பெண் ஒருத்தி வீட்டு வாசலிலே கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்; அவளையே உற்றுப் பார்த்துக்கொண்டு அருகில் நின்ற பையனை கவனிக்கவில்லை; கோலம் பூர்த்தியாயிற்று; தலை நிமிர்ந்து பார்த்தாள். குறும்பும் குமிழ் சிரிப்பும் கொண்ட தோழன் முகத்தைக் கண்டதுமே, அவளுக்குச் சிறிது அச்சம் உண்டாயிற்று. "இன்று முழுவதும் குனிந்திருந்து போட்ட கோலம் இது; எவ்வளவு அழகாக இருக்கிறது பார், தெள்ளிய வெள்ளை மணலைக்கொண்டு இழையிழையாக இட்ட கோலம்! நீயும் இதைக் கண்டு இன்பங்கொண்டால், நான் அளவிலாத ஆனந்தங்கொள்வேன்" என்றாள் அச்சிறுமி.

'அப்படியா! இவ்வளவு நேரமும் பக்கத்திலே காத்துக் கொண்டிருந்தவனைக் கண்ணெடுத்துப் பாராமல் இருந்ததற்குக் காரணம் இந்தக் கோலம் அல்லவா? இதையழித்தாலொழிய எனக்குத் திருப்தி இராது; அப்போதுதான் நீ இந்தக் கோலத்தை மறந்து என்னோடு விளையாட வருவாய்' என்று அவள் அருமந்தக் கோலத்தைச் சடக்கென்று காலால் அழித்துவிட்டான்.

"கண்ணா! இன்று முழுவதும் முதுகு நோவக் குனிந்திருந்து இட்ட கோலத்தை ஒரு நொடியிலே நீ அழித்துவிட்டாய்! ஆனாலும், உன்மேல் எனக்குக் கோபம் இல்லை; யாருக்கு வேண்டும் இந்தக் கோலம்; எனக்கும் இதைக் காணப் பிடிக்கவில்லை" என்றாள் அச் சிறுமி.

இதைக் கேட்ட நான் அன்பின் தன்மையைக் கண்டு வியந்தேன்.

# உதிர்ந்த மணிகள்

## ஸம்ஸ்கிருதம்

சென்ற காலத்தைப் புராதன காலமென்றாலும், மண்ணில் மறைந்த அரசர்களை அக்காலத்து அரசர்கள் என்றாலும், ஸம்ஸ்கிருத பாஷையைப் பழங் காலத்துப் பாஷை என்று கூற முடியாது. அப்பாஷைக்கு மூப்பு என்றும், இறப்பு என்றும் எதுவும் கிடையாது. என்றும் சிரஞ்சீவியாக இருக்கும். உலகில் ஹிந்துமதம் இருக்கும் வரை, மனிதன் தன்னுடைய உயர்ந்த எண்ணங்களை அழகிய வார்த்தைகளால் அலங்கரிக்கும் வரை, இப்பாஷை ஜீவபாஷையாக விளங்கும். இக்கடினமான பாஷையைக் கற்றுக்கொள்வதற்குக் கசந்து நவயுகத்தின் எளிய பாஷைகளைக் கற்கக் கூறினாலும், மனிதன் இத்தேவ பாஷையைத் துச்சமென எண்ணிக் கைவிடான். இதே நிலைமைதான் இப்பொழுது மேல் நாட்டிலும் ஏற்பட்டிருக்கிறது. இங்கு ஸம்ஸ்கிருதத்தை நோக்குகிற முறையில்தான் அங்கும் லத்தீன் பாஷையையும் கிரேக்க பாஷையையும்; துருக்கியில் அரபி, பாரசீக பாஷைகளையும் நோக்குகிறார்கள். மனிதன் மூப்பு மேலிட்டதும், காளைப் பருவத்தில் அந்த பாஷையைச் துச்சமெனத் தள்ளியதற்கு வருந்தி அதைக் கற்க ஆரம்பிக்கிறான். ஆதலால் எவரும் ஸம்ஸ்கிருதத்துக்கு அழிவுகாலம் வந்துவிட்டதே என்று வருந்தவேண்டாம். இக்காலத்தில், அரசியலினாலும், ஜாதிக் கட்டுப்பாடுகளினாலும், மத வேறுபாடுகளினாலும் தேவ பாஷைக்கு அதிகச் சலுகை கொடுக்கப்படாமல் இருக்கிறது. அது பெருந் தவறு. ஜாதிமதபேதமிருந்தாலும், இது இந்தியனுக்கு, அவனுடைய மூதாதையர்கள் விட்டுப்போன பிதுரார்ஜித சொத்தே. இப்பாஷையை அசட்டை செய்வதில் இந்தியன், உலகத்தில் அவன் அலங்கரித்துக்கொண்டிருந்த பீடத்தை இழக்கிறான். தற்காலிகமாகப் பொது மக்கள் இப்பாஷையை அசட்டை செய்ததால் இது இறந்துவிடப் போவதில்லை. ஊர்வலத்தில் யானைக்குப் பின்னால் பலர் போவதைப் போல, இப்பாஷை எவருடைய உதவியின்றியும் உலகம் உள்ள அளவும் ஜீவித்திருக்கும்.

ஏ. எஸ். பி. அய்யர், ஐ. ஸி. எஸ்.

## ஜப்பானின் சாம்ராஜ்யக் கனவு

ஜப்பான் சாம்ராஜ்யம் காலக் கிரமத்தில் எவ்விதம் விசாலமடைந்தது என்பனதக் கீழே காணும் அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

| வருஷம் | சதுர மைல்கள் |
|---|---|
| 1895 | 161,000 |
| 1905 | 175,000 |
| 1910 | 200,000 |
| 1931 | 685,000 |
| 1933 | 757,000 |
| 1935 | 858,000 |

## பத்திரிகை உலகம்

"பத்திரிகை என்பது ஒரு புனித ஸ்தாபனம். அப்படிக் கோயில்போல இருக்கவேண்டிய பத்திரிகை நாளடைவில் ஒரு கருவியாக மாறிற்று. பிறகு பத்திரிகை என்பது ஒரு தொழிலாகவும் வியாபாரமாகவும் போய்விட்டது" என்று ஒரு பிரபல அறிஞரின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி 'விக்காம் ஸ்டீட்' என்ற பிரபல பத்திரிகாசியர் தமது 'தி பிரஸ்' என்ற புத்தகத்தில் சில உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்.

மிஸ்டர் விக்காம் ஸ்டீட் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். பத்திரிகை உலகம் எப்படி வளர வேண்டுமென்று அவர் சொல்கின்ற அநேக கருத்துக்களை தமிழ்நாட்டிலுள்ளோரும் அறிந்துகொள்வது நல்லது.

—ராஷ்டிரவாணி.

## காலஞ்சென்ற மைசூர் மஹாராஜா

காலஞ்சென்ற மைசூர் மஹாராஜா இந்தியாவில் பிறந்த மஹா புருஷர்களில்

ஒருவரென்றே கூறவேண்டும். இவரைப் போன்ற புருஷரை ஐரோப்பாவில் எங்கும் பார்க்கமுடியாது. மஹாராஜா காருண்யம் வாய்ந்தவர். அத்துடன் அவருடைய சுத்தமான வெள்ளை மனமும், சாந்த சொரூபமும், தெய்வ பக்தியும் எல்லோரையும் இழுத்தது. பெரிய வேதாந்தி; ஹிந்து மதத்தின் ஒருதூண். தேவர்களும் ரிஷிகளும் பல்லாயிரக் கணக்கான வருஷங்கள் தவங்கிடக்கும் ஹிமாலயத்துக்குச் சென்று பல இடங்களைத் தனியே சுற்றிப் பார்த்திருக்கிறார். பல தடவைகளில் புத்தரைப்போல இவ்வுலக இச்சைகளைத் துறக்க முயன்றார். ஆனால் திக்குதிசை தெரியாத குடிகளை நல்வழிப்படுத்தும் சேவை அவர் தலைமேல் விழுந்தது. மைசூரிலும், இந்தியாவிலும், ஏன் இங்கிலாந்திலுங்கூட அவரை ஓர் ராஜரிஷியெனவே மதித்துவந்தனர். இந்தியன் ஒவ்வொருவரும் அவர் வழியைப் பின்பற்றுபவராக.

ஸர். எப். யங்ஹஸ்பேண்டு.

## மனிதனும் தொழிலும்

மனிதனுக்கு இருவித குண விசேஷங்களுண்டு. ஒன்று ஆத்ம இச்சை; மற்றொன்று மிருக இச்சை. ஆத்மா நாளாவட்டத்தில் பரிபக்குவ மடைந்து உயர்ந்த ஸ்திதியை அடைய மேலே பிறக்கும் மிருக இச்சையானது கீழேயே உழல ஆரம்பிக்கும். மனிதன் பிறக்கவும் மரிக்கவும் ஆசையுடையவனாக இருந்தால் மேல் நாட்டு ரீதியில் தொழில்களை ஆரம்பிக்கலாம். இதே தொழில்தான் இப்பொழுது மேல் நாட்டில் நடக்கும் காருண்யமில்லாத கோர யுத்தத்தின் அஸ்திவாரம். மேல் நாட்டுத் தொழில் மனிதனுடைய லக்ஷணத்தை அழித்து விடுகிறது. இக் கைத்தொழில் படைகளின் உதவியில்லாமல் வளரமுடியாது. அப்படை இருக்கும் இடத்துக்கு ஆயிரம் மைலுக்கு அப்பால் கூட சமாதானம் நிலைத்து நிற்காது. ஹிம்சைக்கு உயர்ந்த ஸ்தானம் கொடுத்திருக்கும் இவ்வுலகில் ஒரு நாட்டுக்கு மட்டுந்தான் இடமிருக்கும். அதுவும் வலி பொருந்திய நாட்டுக்குத்தான். தடியெடுத்தவன் தண்டல்காரன்.

மனிதனுடைய வாழ்க்கையை எவராலும் கட்டுப்படுத்த முடியாது. அதை அவனுடைய பொருளாதார நிலைமையால் தான் நிர்மாணம் செய்ய முடியும். ஒரு நாட்டில் வாழ்க்கையின் நிலைமை குறைந்திருக்கிறதே என்றால் அதற்கு அந்நாட்டின் பொருளாதார நிலைமை குறைந்திருப்பதுதான் காரணம். இங்கிலாந்தில் வாழ்க்கை மேன்மையாக இருக்கிறதே என்றால், இங்கிலாந்து அதன் ஆட்சிக்குள்ளிருக்கும் பல நாடுகளை கொள்ளையடிக்கிறது. நாட்டின் உற்பத்தி அதிகமானால் நாட்டின் வாழ்க்கையும் உயரும். உற்பத்தியையும் பொருளாதாரத்தையும் கவனியாது வாழ்க்கை நடத்துவதால்தான் நம் நாட்டில் பலர் கடனாளியாகிறார்கள்.

—ஜே. ஸி. குமரப்பா - கிராம உத்தியோக பத்திரிகை.

REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர். நெ. 1506

அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர் :—

M. K. கிருஷ்ண செட்டி
கோயமுத்தூர்

மதராஸ் விற்பனையாளர் :—

V. கனகய்ய செட்டி & Co.,
நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்,
மதராஸ்.